உ

கடவுள்துணை.

அகஸ்தியமகாமுனிவர்
அருளிச்செய்த

# குருநாடி சாஸ்திரம்.

இருநூற்றுமுப்பத்தைந்து.

காப்பு.

ஓங்காரங்கொண்டெழுந்த பிரணவத்தின்செய்கை
யுற்றமிகச்சூத்திரமா யுரைத்தவாறு
ஆங்காரங்கொண்டதோர் மனதைத்தேர்ந்து
அறிவுருவசொரூபமென்று மாந்தர்நேர்மை
பாங்கானநாடிநரம் பானவாறு
பழமறைதானாய்ந்து பாடிவைத்தேன்
தீங்காதகணபதியுங் கந்தன்றானும்
நிசமாகவந்துதவுங் காப்புத்தானே.

தானானநாடிநரம் பானசெய்கை
தாரணியில்மானிடர்செய் தர்மகர்மம்
ஊனானவுடலுயிராய்த் தேசமான
வுரையறிந்துவுதித்துநின்ற வுண்மைக்கியானம்
வானானநாடிவகைக் கெல்லாந்தன்னில்
வளம்பெறவேயொருநாடி மார்க்கங்கண்டு
தேனானகுருநாடி யாய்ந்துசொன்னேன்
தேசிமுதல்சிவனுடனே தெளிந்தகாப்பே.

வேறு.

சீர்பெறுமுனிவர்வேதந் தெளிந்துபுன் னுலகத்தோர்கள்
பேர்பெறுங்கருவிலுற்ற பிணிபலவுணர்ந்துதோய்ந்து
ஊர்பலநாடிக்கெல்லா முயர்பெருநாடிமூன்றில்
சேர்குருநாடிநேர்மை செயலுடன்கூறலுற்றேன்.

உற்றிடுநாடிமூன்றி லுயர்நிலைக்குருவைப்பற்றி
நற்றிடுநரம்பின்செய்கை நன்மனிதர்க்குப்போலே
பற்றிடுஞ்சுழினைதாக்கிப் பதிபசுபாசத்துற்று
மற்றுள்ளமண்டலங்கள் மூன்றையுமருவிநீளும்.

RangaRakes tamilnavarasam.com

நீளுமேவாதபித்த சிலேற்பனமூன்றுமேவி
வாளுமேயாக்கைகோத்து வளர்ந்திடுங்குருவாநாடி
கோளுமேவிளைந்துநோய்கள் கூடழிவாகச்செய்யும்
நாளுமேநடத்துஞ்செய்கை நவிலுறேநாடிக்கேளே. 5

கேளெனச்சொன்னீரையா கிருபைவைத்தடியேன்கேட்கக்
கோளெனமருவிநிற்குஞ் சூட்சத்தைதொட்டுக்காட்டி
ஆளுமாநாடிக்கெல்லா மருள்பெருங்குருவாநாடி
சூளுமேவகைதானன்றாய்ச் சொல்லிநீர்துலங்குவீரே. 6

வாததோற்றம்.

உற்றிடுமுலகத்தோர்க்கு வுறுபலவியாதியெல்லாம்
பற்றிடுங்குணங்கடன்னைப் பகர்ந்துரைசெய்யவேண்டில்
எத்திடுஞ்சனனவாறு முடலுயிரானவாறு
மத்திமாமலையில்வாழு மாமுனிவகுத்தார்தாமே. 7

தானெனுநாடிபத்தில் தரித்திடுநாடிமூன்றில்
கோனெனுங்குருவாநாடி கருவினில்தரித்துவோங்கி
யூனெனுநிணமுநெய்யு முதிரமுஞ்சலமுமாகித்
தேனெனுந்தெளிவாயாடிச் செயலுடன்கூறலுற்றேன். 8

துலக்கவேவேதநாதன் றுண்டிளைகழிலைகாட்டிப்
பெலக்கவேயிடைதான்வாதம் பிங்கலைபித்தமாகும்
நலக்கவேசுழிதான்சேத்மம் நவமுடன்வலமேவாதம்
கலக்கிடுநதியேபித்த மையதுநீரதாமே. 9

ஆமிந்தப்பூதங்கேளு மமர்ந்திடுவாதம்வாய்வு
ஓமிந்தப்பித்தந்தேய்வு வுற்றநல்லையந்தன்னில்
வாமிந்தவபானவாத வருவியபிராணன்பித்தம்
தாமிந்தச்சமானன்சேத்மஞ் சாற்றினேன்சாரந்தானே. 10

சாற்றினேனிவர்கள்மூன்றா லாக்கவுமழிக்கலாகும்
தோற்றிடும்வாதத்தாதி சுருதியாய்க்கருவிக்கெல்லாம்
மாத்திரையாகத்தானே வாசல்காப்பதுவேயாகும்
தோற்றிடுதொழிலுக்கெல்லாஞ் சித்துடன்சத்துமாமே. 11

வாதபித்தம்.

ஆமிந்தநாடிதானு மறியெழுபத்தீராயிரம்
தாமதுள்நாடிபத்துச் சகலவாதாரமாகி
நாமிந்தநாடியேழாய் நற்றிசைதோலெலும்பு
ஓமிந்தரத்தமூளை சுக்கிலமூன்றுமொன்றே. 12

RangaRakes tamilnavarasam.com

ஒன்றதாநாடிதானு முடனுயிருணர்வதாகி
நின்றதாவாதபித்தஞ் சிலேற்பனமூன்றுமொன்று
ஒன்றையேயுறுப்புத்தோறு முறுபின்னலாகிப்பின்னி
நின்றதேயிடைபிங்கலையாஞ் சுழிமுனைநடுவுமாமே. 13

சுழிமுனைநடுவாய்நின்ற சிலேற்பனத்தொழிலைக்கேளு
வழிவழியாகப்பித்தஞ் சிலேற்பனநெருங்கும்போது
அழிவதுபித்தநீங்கி வாதத்தைநெருங்கக்கொள்ளும்
பொழியவேவாதஞ்சென்று பிராணனைநெருங்கிக்கொள்ளும். 14

தள்ளுமேவியானன்சென்று வேரினையலைத்துமோதிப்
புள்ளுமேபழுத்துச்சாய்ந்தாற் போமதுசீவனங்கே
கொள்ளுமேமுன்செய்கர்ம கர்மத்துக்கீடாய்ச்சாகும்
தெள்ளுமேநாடிகூர்மை யின்னமும்புகலக்கேளே. 15

வேறு.

ஓகழிந்தவுடலெடுக்கும் குறிப்புச்சொல்வே
　　னுறுதியாக்கேகமுறி யுப்புதன்னை
வாகழிந்தமண்டலங்கள் மூன்றுக்குள்ளே
　　மருவிநின்றபதிபசுவும் பாசமாகி
ஆகழிந்தபிராணனொடு அபானங்கூடிச்
　　சுகமான சமானனுமாய் மூன்றுபேரும்
நாகழிந்தவிதங்களிலே யெடுத்துவாக்கை
　　நயசுகமுந்துக்கமுட னெடுத்தசென்மம். 16

சென்மமதுசெனித்தவுடன் முப்பாவந்தான்
　　தீவினைக்குமீடாகிச் சென்மமாகிக்
கன்மமென்றுந்தர்மமென்றுங் கருவிப்புக்கிக்
　　கலந்துநின்றவன்னியொடு காலுநீரும்
உண்மெனும்வாதபித்த சிலேற்பனமாகி
　　யூடுருவிப்பிராணனோ டபானன்றானும்
தன்மமெனுஞ்சமானனுமாய் மூன்றுபேருந்
　　தாரணியிலபானனுமா யானுமாச்சே. 17

ஆச்சுதேபானனது வாய்வுமாச்சு
　　அதன்மேலேபித்தமது கண்ணேயாகி
வாச்சுதேசிலேத்மமது கபநீராகி
　　வசைமூன்றுவாழ்ந்தங்கே தொந்தமாகி
ஏச்சுதேபலபிணியும் பிராணிகளைகபநீர்
　　எழுந்தபலனோயாகி யீடுமாகி

RangaRakes tamilnavarasam.com

நாச்சுநாலாயிரத்து நானூற்றுச்சொச்சம்
நவிலுங்குணப்புவியோர்க்கு நாட்டினாரே. 18
நாட்டினார்வாதத்தி லெழுந்தரோகம்
நலமொடுவாதமொடு வாய்வுகுன்மம்
கூட்டியேயுதிரத்தி லண்டவாய்வு
குடல்சடல்வாய்வுபுக் கெழுந்துசுற்றம்
காட்டினார்விஷகடிகள் திமிருருட்சை
காதடைப்புப்புற்றுவகை கிராணிதோஷம்
மூட்டினார்கெர்ப்பத்தைக் கெடுத்தவாய்வு
மூன்றுவகைவிபர மறுந்தவன்வைத்தியனாமே. 19
ஆற்றவாதபித்தம் சேத்மதொந்த
மதன்விபரவகைதெரிந்து நோய்க்குணமறிந்து
கோதற்றவாதிமகன் வயித்தியமேசெய்யில்
கூறுகண்டுசெந்தூரக் களங்குபற்பம்
தேதற்றதிராவகங்கள் செயநீர்செய்வான்
திறமுடனேநோய்தீர்த்துத் தொந்தஞ்செய்வான்
தாதுற்றபித்தந்தா லெழுந்தரோகஞ்
சாற்றுகிறேன்கருவறிந்து சார்ந்துபாரே. 20

கற்பத்தினால் பிறக்கும் விபரம்.

பாரிந்தபித்தந்தா லெழுந்தரோகம்
பதமுடையகண்ணாலே யெலும்பைச்சார்ந்து
நேரிந்தசிரச்சூலை சோகைபாண்டு
நெற்றியில்கண்ணேணை நெடும்பாடோடே
சிரிந்தகிறுகிறுப்பு வுழலைதாகம்
கிராணியொடுபிரமேகம் கிருமிதோஷம்
சாரிந்தவுள்ரோகம் வெட்டைசூடு
சலக்கடுப்புமுளைமூலம் பவுத்திரமுந்தானே. 21
தானென்றகபத்தாலே யெழுந்தரோகஞ்
சாற்றக்கேள்சிலேத்மமென்னுந் தொண்ணூற்றாறும்
தேனென்றவிருமலோடு ஈளைகாசம்
சிரரோகங்கிராணிகங்கள் மண்டைரோகஞ்சூலை
ஊனென்றவாய்வலிப்பு மூக்குநீர்காள்
உற்றசங்கண்ணிநீர் புல்லங்காசம்
வானென்றமண்டையினோ யனேகமுண்டு
வகைவிபரம்மூன்றுமே வகுத்ததாமே. 22

RangaRakes tamilnavarasam.com

## வாதபித்த சிலேத்பனம்.

வகுத்ததொருவாதத்திற் பித்தங்கூடில்
வாயுமொருசிரச்சூலை வழக்கமாகும்
மிகுத்ததொருபித்தத்தில் சேர்ந்தவாய்வு
வேகமுள்ள சலக்கழிச்ச விரைச்சல்வாய்வு
எருத்தமிகுவாதமொடு காந்தல்குத்து
இளம்பிள்ளைவாதமொடு காந்தல்குத்து
சைத்தியமுமிருமல்சயஞ் சன்னிவாதம்
தலைதனிலேபலதோஷஞ் சாருந்தானே. 23

தானென்றவாதபித்த சிலேத்பனந்தான்
தலங்களிலேதொந்தித்தால் கூறுகண்டு
வானென்றமூவரினாற் றெருந்தமேறு
வருங்குணத்தையாராய்ந்துணர்ந்து மனதிற்கண்டு
பானென்றவிழ்தத்தின் பதங்கள்கண்டு
பார்ப்பவனேவயித்தியனும் பாருபாரு
தேனென்றநாடிகண்டு குணமுங்கண்டு
தெளிந்துணர்ந்துசெய்கைகண்டு செய்துபாரே. 24

பார்க்கையிலேயிணியதனை யறிந்தாயானால்
பரிவானமருந்தினுக்குப் பிணிதான்றீரும்
நோக்கையிலேபிணியதனை யறியாவிட்டால்
நோய்தீரபாட்டாது மருந்தேறாது
தாக்கையிலேகுருவினிட மனதுநொந்தால்
சண்டாளனாகியவன் தவறிப்போவான்
சேர்க்கையிலேகுருவுக்கு மனந்தான்மிக்க
செய்தவனேவயித்தியனுந் தெளிந்துபாரே. 25

பார்க்கையிலேசெனனமெடுத் தாக்கையாலென்
பாதியவர்முன்செய்த தர்மகர்மம்
ஏற்கையிலேபெண்ணோடு புருஷன்சேரி
லீக்காயநிலைக்குகன்றே புரியட்டகத்தாடு
காக்கையிலேயிடகலைக்குச் சோடசமேபாயுந்
திறமுடனேயுடலுயிரா முறுதியாமே. 26

ஆமிதுவேசுக்கிலமே பெருத்ததானால்
ஆணாகுமதுகுறைந்து சுரோணிதந்தான்மீறில்
ஓமிதுவேபெண்ணாகு முறுதியாக
ஓகோகோமுன்செய்த கர்மத்தாலே

RangaRakes tamilnavarasam.com

பூமிதுவேநோய்களெல்லாம் பூண்டுக்கொண்டு
புகுந்துணர்ந்துபிறப்பிறப்பு பூணுங்காயம்
காமிதுவேகருக்குருவு மூவந்தநேர்மை
நாட்டியவெல்லார்க்கும் நவின்றவாறே. 27

வாறுகேள்மடலான செய்கைதானும்
வகைவிபரமுன்செய்த கன்மத்தாலே
கூறுடனேயறிகலையாற் கிருமியாலும்
கொஞ்சியதுவாயுவுடன் கலைத்திரவுமீதி
வீறுடனேவெட்டையினாற் பசியினாலும்
வேறுடனேகர்ப்பமது வழிந்துபோகும்
வாறுடனேமடலாகுங் கர்மத்தாலே
வந்தவகையிதுவென்ன வகுத்தார்தாமே. 28

தானங்கேசுக்கிலந்தா னருகுநுனிப்பனிபோல்
தங்கியதுபதினைந்தில் மலத்துக்காணும்
ஏனங்கேயிருபத்து ஐந்தாநாளில்
இயல்புடனோர்திங்கள் தனிற் றலையுண்டாகும்
வானங்கேரண்டுதிங்க ளிற்றுமுடிவாகும்
வளர்மூன்று திங்கள்கை காலுண்டாகும்
வேணங்கேயைந்தாறில் விரல்நகங்கள்தோன்றும்
வேதாந்தம்பிண்டம்வளர் விபரமதுதானே. 29

தானேதானன்னையுண்ட வன்னமுந்தண்ணீருஞ்
சாந்தமாய்த்தொப்புள்கொடி யூடேபுக்கி
பானரசவமுதமெனச் சேயுந்தோற்றுப்
பாங்குடனேழாமாதங் குடலுதிரஞ்சேரும்
மானேகேளிந்தவகை வளர்த்தியான
வகைவிபரநன்றாக மானிடர்க்கு
வானவர்கள்முனிதேவர் கிருபையாலே
மதலையுருவானவகை மாதஞ்சேரே. 30

வேறு.

சேருமேயெட்டாமாதந் திறமுடன்சிறந்துமோதி
ஊருமேயுண்பதனை லுள்ளறிவுண்டாமப்பால்
காருமேயொன்பதானாற் கருணையாம்பத்தில்நாடும்
தேருமேபத்தாமாதம் பூமியிற்றொழுதுவீழும். 31

தொழுதுடன்வீழ்ந்தபோது தத்துவந்தொண்ணூற்றாறு
முழுதுடன்யாக்கையாகி முற்றுமேநரம்புநாடி

RangaRakes tamilnavarasam.com

பழுவுறுதசையெலும்புத் தாதுவும்பதிவாயொத்து
கொளுமதுதேகத்தன்னிற் கூறுநானுரைக்கக்கேளே. 32

நாடிநிலையறிய.

கோட்டிடுநாடிதானு மிருநூற்றுநாற்பத்தைந்தில்
நாட்டிடுநாடிபத்து நயம்பெறுமேழுதானு
மூட்டிடுபஞ்சநாடி முற்றுமேபார்க்கும்போது
சாட்டிடுநாடிதானு மூன்றெனச்சாற்றலாமே. 33

சாற்றுறேனிடையேவாதம் பிங்கலைபித்தமாகும்
தேற்றுறேன்சுழினைதானுஞ் சிலேத்பனமென்னலாகும்
மாற்றுவேன்வலமேவாதம் வளர்ந்திடும்பித்தந்தியாம்
போற்றுறேனையந்தண்ணீர் பொருந்திடுமபானன்வாதம். 34

வாதமொன்றுரைத்தபின்பு மருவியபிராணன்பித்தம்
சாதமென்றுரைத்தசிலேத்பனஞ் சமானனுநோயதாகும்
போதமென்றவர்கள்மூன்று லாக்கவுமழிக்கலாகும்
வேதமென்றுரைத்தசெய்கை விளம்பினேன்புவியில்மாதே. 35

மாதவர்முனிவர்தேவர் வளர்ந்திடும்வானத்தோர்கள்
வேதவர்பத்தர்சித்த ரிருடிகண்மேல்நோய்சாராது
பாதகர்பிறவியெல்லா நோய்தணிந்தழுந்திமாள்வார்
காதலால்யோனியாசைத் தீமையாலிறப்பர்தாமே. 36

தாமதுசுவைகளாகுந் தருக்கியபோகத்தாலும்
போமதுபிறந்திறந்து புகுந்திடுநோய்க்கூட்டுக்கொள்ளே
சோமதுகாமத்தாலே செனித்திடும்பிண்டஜென்மம்
நாமிதுவறியச்சொன்னே னாடிநீதெளிந்துதேரே. 37

சேறுவீர்கற்பங்கொண்டு சிதம்பரபூசைசெய்து
தாறுநீசத்திபூசை வைரவன்வீரவாகு
வேறுநீகணேசன்கந்தன் சிறப்புடனிவர்கள்பூசை
வேறுகேளுரைத்தமுன்னு லாய்ந்துமேசெய்யநன்றே. 38

4448-வியாதி தொகுப்புப்பெயர்கள்.

நன்றெனவியாதிதானு நவிலுறேனகமத்தில்
குன்றெனவளர்த்தநோய்கள் சகலமுந்தொகையாய்ச்சொல்வேன்
அன்றெனவெழுந்தநாடி யெழுபத்தீராயிரந்தான்
கன்றெனநாடிபத்துக் கருத்துறுமேழுகாது. 39

RangaRakes2 tamilnavarasam.com

தாதுவேபஞ்சபூத மதிலுறுநாடிமூன்று
கோதுறுகுருவாநாடி குறிப்புடன்மேவிநின்று
தாதுறுசத்தத்தாது தசைநரம்பெலும்புதானும்
வேதுறுரோமமச்சை சுக்கிலநெய்யாம்பித்தம். 40

பித்தநாற்பத்துநான்கு பெருவயிறெட்டதாகும்
உற்றதோர்பீலியெட்டு மோசியமூன்றதாகும்
யெத்தவேசிலேற்பனந்தான் யிகுத்திடுந்தொண்ணூற்றுரு
மற்றுமேவாதரோகம் வகையுமெண்பத்துநாலே. 41

சன்னியும்பதினெட்டாகுந் தான்வலிநேத்திரந்தான்
உன்னியதொண்ணூற்றுறு மூழவையுமூன்றதாகும்
மின்னியபக்கசூலை மேவிடுமேழதாகும்
சென்னியில்விக்கந்தானும் சேர்ந்திடுமைந்துதானே. 42

பிளவையில்சிலந்திதானும் பெருந்துடனைம்பதாகும்
அளவிலாச்சுரமேகேளு வறுபத்துநாலதாகும்
களமிகப்படுத்தும்பாண்டு தானுமேயஞ்சதாகும்
இளகியகுன்மமெட்டு மேந்தியவிக்கலாமே. 43

இந்திரகோபதோஷ மிருபதுமெழுபத்தாறும்
அந்திரவாயுசங்கை யாயிரத்தெட்டேயாகும்
தந்திரப்பார்வைதோஷந் தானுமேநூறதாகும்
மந்திரக்குமிழியெட்டு மகோதரமீரெட்டாமே. 44

படுவன்முப்பத்திரண்டு பருவொருநாற்பத்தொன்று
முடுகிடும்விஷபமாறு முற்றுமோவூசிமூன்றுந்
திடுகிடும்பீலிமூன்று சிரசினிற்சிலந்திசொல்லில்
கடுகிடுமைம்பத்தாறு கரப்பானுமெண்பத்தைந்தே. 45

திருக்குநோயென்பதாகுந் திரளும்விப்புருதிபத்தாம்
மருக்கவேகிராணிதோஷ மாறுமேமிருபத்தொன்று
மிருக்கிடும்பிளவைதானு மேழெனுமிவையேசொல்லில்
கருக்கிந்ததோஷந்தானுங் காணுமேநாற்பத்தாறே. 46

குட்டமும்பதினெட்டாகுங் குறைநோவுமெட்டதாகும்
திட்டமாஞ்சூலையெட்டுச் சித்தியதாறலாகுங்
தட்டுநீரிழிவுசொன்னேந் தானுமேயிருபத்தொன்றும்
சிட்டமாம்விஷயமைந்துஞ் சேரும்காமாலையாரே. 47

மோகமுமிருபத்தொன்று முகுயோனிச்சூலையெட்டுந்
தாகமுமார்பதாகுந் தனிரத்தபித்தமூன்றுஞ்

RangaRakes tamilnavarasam.com

சோகையுமூன்றதாகுஞ் சூசிகாவாய்வுபத்தும்
ஆகத்தில்வீக்கமொன்பா னரையாப்புமூன்றதாமே. 48

ஆனதோர்நரம்புரோக மாயிரத்தொருநூறென்னும்
ஈனமாங்குந்திரந்தா னிருபதுபன்னிரண்டு
தானமாந்தண்டில்ரோகந் தாமொருமூன்றதாகும்
கானமாங்குழலினுளே கசரோகமூன்றதாமே. 49

எலும்பினிற்பத்துரோக மீனொண்பதென்றுசொல்லுங்
கலங்குமேபெருவயிற்றில் கலந்திடுநூறெட்டென்னுங்
குலுங்குமேதலைநோக்காடு குறித்திடுமைம்பத்தொன்பான்
நலங்குசேர்தலையின்மூளை நாற்பதுரோகந்தானே. 50

மூன்றுமேயுகரரோக நூற்றெட்டுநாற்பத்தென்னும்
பற்றியநாக்கில்ரோகம் பன்னிரண்டாகுமென்னச்
சுற்றியகண்டமாலை சொல்லியதெட்டதாகும்
மற்றுமாநேத்திரரோக மைந்துடநாலதாமே. 51

காதினில்வியாதிகாணுங் கருதிடுமிருபத்தெட்டும்
மார்பினில்நோயைந்தாகு மற்றொருநாலதாகும்
மாதியாநெற்றிரோக மஞ்சனுரோரிரண்டு
சோதியேயுதிரமண்டெலி சொற்படியிரண்டதாமே. 52

புண்ணினிற்சன்னியைந்து பொருந்தியவாழ்நீரைந்து
கண்ணியநாசிரோக நாலோடுமூன்றுமென்னத்
திண்ணியவாதமெட்டுஞ் சிரங்கணநாலதாகும்
பண்ணியரோகஞ்சூழ்ந்து பாரிற்கும்வாறதாமே. 53

காயாற்றுவாசனைமந்து கதித்திடும்பவுத்திரமெட்டு
மாயமாமுனிவன்சொன்ன மூலமுமாறதாமே
சாயமுங்குட்டச்சிலந்தி தாமொருமூன்றதாகும்
மாயமாமுனிவன்சொன்ன மூலமுமாறதாமே. 54

தேகத்தில்கழிச்சலைந்து திகழ்முலைகுத்துநாவும்
வகுத்தினில்புழுவேகேளு வளர்ந்திடுமிருபதென்ன
மெகத்திடுமூச்சுவாத மெய்யதோநாலாமென்ன
பகைத்திடுபதமிரண்டு பாய்ந்தபீநசமுநாலே. 55

மூத்திரக்கழிச்சல்நாலு முத்துநீரடைப்புநாலு
மாத்திரைப்பாதசக்கரம் வந்திடுநாலாமென்னச்
சாத்திரப்படியேசொன்னேன் தந்தத்தில்வாயுவெட்டு
சூத்திரம்படியேயண்ட வாயுவுமேழதாமே. 56

RangaRakes tamilnavarasam.com

மாந்தமுமெட்டதாகு மயங்கிடுமூர்ச்சையாகும்
சேர்ந்திடுபிள்ளைதோஷஞ் செப்பிடில்நூற்றெட்டாகும்
வளர்ந்திடுமடந்தாய்வாத சுரோணிதமேழதாகும்
தாழ்ந்திடுகன்னரோகந் தானொருவைந்தேயாகும். 57

அட்டையின்கடியின்மூன்று யானையின்கடிகள்மூன்று
நட்டுவக்காலிரண்டு நல்லதோர்விஷமுநாலு
தட்டிடுஞ்செந்தாமதானுந் தாக்கிடும்விஷமுமைந்து
மிஷ்டமாமெலிவிஷங்க ளீரொன்பதென்றுசொல்லும். 58

வேறு.

கேளாக்கடிவிஷமுமூன்று சேர்ந்தமாறையவிஷமஞ்சு
நாளாய்நரியடியொன்றுகு நலமாங்கருவாய்விஷமூன்று
கேளாயெரும்புவிஷமைந்து மெருவாரக்கடிமூன்று
தேளாஞ்சுந்தரிவிஷமூன்று திரிக்கபுலிவிஷமைந்தாமே. 59

வேறு.

எரிபுலிகடியேயெட்டு ஏனத்தின்விஷமிரண்டு
கரியுநீர்க்கரடிதானுங் கடித்திடும்விஷமிரண்டு
பரிவுள்ளகுரங்குமந்திப் பலகடிவிஷமுமூன்று
விரிவுளசிறுபாம்புதானு மேவியேவிஷமுமூன்றே. 60

பூனையின்கடிகள்ரண்டு பேய்நரிவிஷமிரண்டு
சேனையிலுயுத்தஞ்செய்து தெரித்திடுங்குண்டுகாயம்
மானையேவென்றகண்ணாய் வல்லயக்குத்துக்காயம்
மீனையேகேளியொன்று விலாங்கதுமொன்றதாமே. 61

பீரங்கிக்குண்டுக்காயம் பெரியதோர்குத்துக்காயம்
கூரம்புபட்டகாயங் குலைப்படுவெட்டுக்காயம்
பாரங்கம்தன்னிற்சென்று பறைபெறக்குடலைப்பீறி
சூரங்கள்பண்ணிப்பீறிச் சூரியால்வகுத்தகாயம். 62

இப்படிமுசல்வலிப்பு எழில்மூன்றுவகையாய்ச்சொன்னேன்
சொற்படியழித்துசெய்யி லதுவகைநாலாயிரந்தான்
ஒப்படிநாடிதானுங் குணங்களும்வருகும்வாறுஞ்
செப்படியிரண்டுங்கொள்ளத் திருவுளமருளிச்செய்தார். 63

நாடிதானியம்பக்கேளீர் நயமுடனறிந்துநீயும்
வாடியமண்ணுளோர்க்கு வரும்வினைவியாதியாகிக்
காடியவியாதிதானுங் கதித்திடுங்கடினஞ்செய்யும்
கூடியவுலகோர்செய்கை தொகுத்துநானுரைக்கிறேனே. 64

RangaRakes tamilnavarasam.com

உற்றதோருடலிற்கூறி யுறப்புடன்விரலினின்று
முற்றுமேநோய்களெல்லா முதிர்பெறத்தோன்றும்போது
பற்றுமேவாதபித்த சிலேற்பனந்தன்னிலொன்றை
பற்றியேதோன்றுமென்று பகர்ந்தனர்முனிவர்தானே. 65

## குருநாடி.

கூறுவார்வேதநாதன் குருநாடிநேர்மையெல்லாம்
வீறுசெய்யுடலில்வாத பித்தமேசிலேற்பனமூன்று
வாறுகண்டறியும்வண்ணம் வழுவாதநாடியொன்று
பேறுகொண்டெழுந்தநேர்மை பிரித்துடனுரைத்தார்மேலோர். 66

ஓருயிரைச்சேர்ந்துவுட லிடைவம்பைத்தோற்றி
ஓரெழுத்தீராயிரநாடியே யிசைந்துபின்னுங்
கார்கெரிமேகம்போலே கதித்திடும்வியாதியெல்லாம்
பேருகொண்டெழுந்தநேர்மை பிரிதியாய்க்கேழ்க்கின்றேனே. 67

கேட்பதோர்வசனந்தன்னைக் கிருபைவைத்தடியார்க்கின்னம்
தாப்புரவகைகட்கெல்லாந் தனித்தனிகுணம்வெவ்வேறு
கூர்ப்புறவின்னதென்று குருவருள்செய்யவேண்டும்
ஆர்ப்பனதெளிந்துநன்று யருள்செய்வீரமார்கோவே. 68

## வேறு.

நாணுவதோர்பிணிகள்வந்தவகைதானேது
　　நாடிசைந்திருந்தவிதம்நடுத்தானேது
அணுகியிருந்தெழுந்துவரும்நகைதானேது
　　ஆகவொருமுடிப்பிருந்ததலந்தானேது
பணிதியொடுவேறிருந்தபதிதானேது
　　பார்வைகுருடானபின்புவிருள்தானேது
தணிவுடனேபொருளிதனைக்குறித்துச்சாய்வீர்
　　சண்டாளப்பிணிகள்வந்ததலத்தைக்கூறே. 69

நணுகியதோர்பிணிகள்வந்தவகையேதன்னில்
　　நாடிவெகுபுசிப்பருந்தல்நயத்தினாலே
சிணுகுபெருந்தாபமறும்பிணிகள்தீரும்
　　தினமரிந்துதின்பீராயில்பிணியோயில்லை
கொணுகுடனேஸ்திரீபோகஞ்செய்வீராகில்
　　கொடியபிணிமிகுதிவரும்குறையுந்தந்து

RangaRakes tamilnavarasam.com

வணிவறிந்துபொசிப்பருந்திப்போகஞ்செய்தால்
வல்பிணிகளவரிடத்தில்வாராதென்றே. 70

நாடியிசைந்திருந்தவிடந்தசைநீர்கூடி
நாட்டமிடைபின்கலையுஞ்சுழிணையும்பற்றி
தேடுபுனற்றீயோடுகாற்றுங்கூடிச்
சேர்புத்தவாதமெனச்சேருமூவர்
ஆடியதோர்மாலயனுமாகுமப்படியே
வாதபித்தசிலேற்பனமும்நேர்மையாடும்
ஓடிவருங்காங்கடன்னிலுறுதியாக
வுற்றுநிற்குநாடியொன்றுகந்துபாரே. 71

மூலமுதலாதாரமாறுஞ்சுற்றி
மூர்த்திநின்றபரவெளியில்தன்மையாகி
பாலமிதுமீதேறிச்சுழிணையூதி
பாதாளநாடியங்கிபதியும்வேறு
காலமதுவரும்போதுகவரும்வீசம்
கத்தரிக்காய்போளருக்குங்காளைப்பற்றி
சீலமுடனொடுக்கவருங்காலந்தன்னில்
தெசவாயுபாரித்துஅலைக்கும்வேளை. 72

அய்யாறுமாறுமங்கேயசைந்துபேர்ந்து
அண்டபகிரண்டமெல்லாமதிர்ந்துசாய்ந்து
மெய்யாறுதட்டுமங்கேயிடிந்துவீழும்
வேரிளகிப்போம்போதுபிராணன்போகும்
பய்யாறும்பரவெளியுமிரண்டுபோகும்
பரமனாரங்கிருந்துபகரும்போது
வெய்யேறுபுரவியும்போமிருளுமாகும்
வேரிழைத்தவகையிதென்றுவிளம்பலாமே. 73

விளம்பலாம்வேரிருந்ததனத்தினூடே
மேவிநின்றபரவெளியிற்சமானமானத்
தளம்பெறவேகட்டிவைத்தமடிப்புமங்கே
சற்குருவின்வைப்பெடுத்ததலமுமங்கே
வளம்பெறவேவேரிருந்தவிடத்தைக்கண்டால்
மன்னுகுருபரனருளேமருவுங்காலம்
மளம்பாசபசுபதியுமொன்றுங்காலம்
மார்க்கண்டநாதனென்றுவகுக்கலாமே. 74

RangaRakes tamilnavarasam.com

வேறு.

விளம்புவேறன்விபரமாக வினவியகிரந்தத்தாலே
வளம்பெறுமுப்பாவத்தால் மறுவியபிணிகள்தீரும்
உளம்பியமனத்தாற்சிந்தை உயர்பெரும்பெரியோர்தன்மை
களம்பெறுநிந்தைசொன்னாற் சார்ந்திடும்பிணிகடானே. 75

குருவருள்விம்பச்சென்று குவலயத்துள்ளமாந்தர்
திருவுளமனதிற்கற்றுத் திருத்தியேவேண்டிக்கொண்டு
கருவினையறியாமூடர் கற்றோரைத்தூஷணித்தல்
குருவினைநிந்தைசொல்லக் கொடும்பிணியாலேமாள்வாய். 76

கற்றதோர்வித்தைபோச்சு கருத்ததுமயங்கிப்பின்னும்
உற்றதோர்வறுமையாகி யுலகுளோர்நகைத்துப்பேசி
பித்தமும்பிரமைகொண்டு பேருலகதனிற்சென்று
சித்தமுந்தெளிவுமாறித் தெருவினிற்கிடப்பார்தானே. 77

குருவினைவணக்கஞ்செய்து கோணமற்பொருளையீய்ந்து
இருவினையறுக்கவேண்டி யெனக்குருதெய்வமென்று
ஒருவனுங்குருவையெண்ணி யுற்றெனகொள்ளும்போது
அருவினையகன்றுநீங்கி யமருலகடைவர்தானே. 78

என்றதோர்சொல்லைக்கேட்டு மின்னமுமியம்பவேண்டாம்
நன்றுதானடியேனென்றி நவிலுலகுள்ளோர்க்கெல்லாங்
குன்றுபோலெழுந்தரோகங் குலைந்திடவகைதான்
கன்றுதான்பசுவைத்தேடிக் கருதிடுமார்க்கஞ்சொல்லே. 79

வேறு.

நாடியென்றால்தசநாடி பத்துண்டாகும்
நலமுடனேயோர்விரலுக் கைந்துகாணும்
கூடியங்கேகைவிரலுங் குவிந்துநிற்கும்
குறிப்பறிவீரொருநாடி குசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்து ஒன்றுக்குள்ளே
அதனுடையசூட்சநிலை வாதவீட்டில்
சாடிநிற்குமூவிரலு முருவிப்பாய்ந்து
சாதகமாய்நிற்குநிலை தன்னைப்பாரே. 80

மூலமுதலாதார மாறுஞ்சுற்றி
மூர்த்திநின்றபரவெளியில் முனையினூடே
பாலமெனுமீதேறிச் சுழினைபற்றிப்
பதிந்துநிற்குங்கத்தரிக்காய் மாறல்போக

RangaRakes tamilnavarasam.com

சீலமுடன் தசநாடிப் பத்துமொன்றாய்ச்
சேர்ந்துநிற்கும்நாடிநிலை தேர்ந்துபார்க்கின்
ஞாலமதிலின்னதென் றறியலாகும்
நாதாந்தகுருவருளை நாடிப்பாரே. 81

அணுகிவரும்பிணியேதென் றறியவேண்டி
யாதாரமென்றதொரு சிரசில்வேரு
பணுகியேயீரலிட வகுப்புதன்னில்
பற்றியதோர்வோதினால் பதியும்நோய்கள்
மணுகியேமூலமதில் குடலிற்பற்றி
மருவியதோர்வேவுகொண்டால் பிணிதான்தீரும்
நணுகியதோர்வாதபித்த சிலேற்பனத்தாலே
நவின்றகுணமிம்மூன்றில் நாடுங்காணே. 82

தண்ணீரால்நெருப்பதனாற் கணத்தினாலுஞ்
சார்ந்தபிணியின்னதென நம்பிப்பார்க்க
உண்ணீராலமுதநிலை தனைச்சாரந்த
புற்றுநிற்குஞ்சிலேற்பனந்தா னுறுதியாக
உண்ணீராற்கூர்மமென்ற ஈரல்தன்னில்
இசைந்துநிற்கும்பித்தத்தின் சுரங்கள்சூலை
பண்ணீரால்மூலமென்ற குதத்தைப்பற்றிப்
பாவியேநிற்குமது வரவுமாமே. 83

ஆதாரமாறுக்கும் நடுவேநின்ற
வப்பற்றிஅலம்புருட நாடியங்கேயசைய
கேதாரமூலத்தே யிருந்தநாதங்
கிளர்ந்துமெள்ளவூடுருவி மேலேசென்று
பாதாரவிந்தமங்கே கழுனைதாங்கிப்
பற்றிநின்றதசவாயு மொன்றாய்ச்சேர்ந்து
சூதானவீடுதான் தள்ளிற்சென்று
குட்சநிலைநின்றவிட முடிச்சதாமே. 84

முடிச்சென்றநாம்பெல்லாம் பிடரிற்சுற்றி
மும்மண்டலங்களுக்கு முதலாய்நின்று
துடிச்சவகைபிராணனோ டபானன்றானுந்
தோன்றிடுமேலாதார மாறுஞ்சுற்றி
வடிச்சிநின்றவாய்வங்கே யபானன்பற்றி
மார்க்கமதுபலவிதமா யலைக்கும்வேரை

RangaRakes tamilnavarasam.com

தடுத்திருந்தபிராணனங்கே யேகுமென்று
சாற்றினர்மலைமுனிவர் தரணியோர்க்கே. 85

வாதமிருந்தெழுந்துவரும் வகைதானேது
வரிசையுடன் தாதுநிலை வகைதானேது
பேதமுடன்பயித்தியங்கள் பிறந்ததேது
பிரமேகம்நீர்கடுப்புப் பொருள் தானேது
தாதுவுருஞ்சயித்தியங்கள் பிறந்ததேது
சாதுரியமகாதோஷம் வாய்த்ததேது
ஓதிவெகுசாத்திரங்கள் படிக்கும்பேரை
யுறுதியுடன்பொருளிதென் றுரைத்தான்சொல்லே. 86

வாதபித்தத்துக்கு விபரம்.

வன்னியொடுகாலகுடி மண்ணைச்சார்ந்தால்
வாதமிகுமண்மிசையில் வாயுமீறும்
திண்ணமுடன்வானிலே காற்றுந்தீயும்
சேர்ந்திடுமேல்பித்தமிகுஞ் சீரைப்பாரு
உன்னிஏழுசிலேற்பனந்தான் தண்ணீர்காற்று
உறுதியுடன்சுழிமுனையி லுற்றுவாங்கும்
சென்னியருள்புகழ்படைத்த முனிவன்சொன்ன
சித்தாந்தமதுரகவி தெளிந்துகொள்ளே. 87

வேறு.

சுழுனையும்பிராணன் தானுஞ் சுழன்றுதானலையைச்சாரில்
நளினமார்ந்தாதுவிட்டு நற்கயிறுகவீசும்
கொளுமுனைபோலேகம்ப மெழுகடலுச்சியேறில்
சுழினையந்தாதுநின்ற மார்க்கமென்றறிந்திட்டாயே. 88

இருகாங்கால்பொறுத்து வுறுப்புகள் தன்னிற்சேர்ந்து
பருவமாம்பிராணவாயு பற்றியேயிடையுக்கூடிக்
குருவெனப்பணிந்துபாணி தன்னையுமேற்கொண்டேதான்
மருகியசிலேற்பனசீதம் வருமெனவகுக்கலாமே. 89

அக்கியவுள்ளநாடி யபானனோடொத்துவாங்கில்
புக்கியமலசலாதி போற்றியமாகநின்று
வெக்கியமந்தந்தானு மிகுத்திடுபசியினாலும்
அக்கினியெழுந்தபித்தம் வளர்ந்திடும்வகையிதாமே. 90

சன்னிப்பிறக்கும் விபரம் வேறு.

சன்னியிருந்தெழுந்துவருந் தலந்தானேது
தாதுவிழுந்தெழுந்திருந்த தன்மையேது
உன்னியொருசுரமிருந்த வகைதானேது
உட்காச்சல்பிரமேக வுகமையேது



RangaRakes tamilnavarasam.com

பொன்னியொருபருப்பிளவை புடைத்ததேது
புகையிருந்தசலமிருந்த பொருள்தானேது
இன்னதெனப்பண்டிதரே வகைதானாய்ந்து
இயம்புவீரிப்பொருளை யியம்புவீரே. 91

சன்னியிருந்தெழுந்தவகை விபரமென்னில்
சாரமுடன்சிங்குவகைதான் மூலஞ்சேரில்
வன்னியொருதண்ணீரும் வாயுங்கூடி
வழுதசிங்குவையகமோ டொத்துச்சார்ந்து
பின்னியெழுந்திடுவதுதான் சன்னியாகும்
பிரிவுடனேகாந்தாரி சுழுனைப்பற்றித்
தன்னிலதுதணலெழுப்பித் தாதுவிம்முஞ்
சடத்துக்குப்பலங்குறையுந் தாதுதானே. 92

ஏற்றமுள்ளவிடைநாடி கலையுஞ்சேர்ந்து
ஈடானவிஷநரம்பு தன்னைச்சாரில்
வாய்த்தவுடன்மாங்கிஷத்தில் வேவுகண்டு
வகையானவிஷநரம்பு மடங்கும்போது
சித்தமுடன்பருப்பிளவை யுடைத்துபோகும்
திரமானவிஷநரம்பில் தருமமுண்டாய்
சாத்தமுடல்சீயுத்தஞ் சலவுமேவுஞ்
சங்கையில்லாவெகுவாறு சலமும்போமே. 93

சூலைவருங்குறி.

நாடியிருந்திருந்தவிஷ நீர்தான்கூடி
நாட்டமிடபிங்கலையுஞ் சுழுனையும்பற்றித்
தேடியதோர்புரைதீயுங் காற்றுங்கூடிச்
சேர்பித்தவாதமென்றுசேருமுவர்
ஆடியதோர்மாலயனு மரணமாகு
மப்படியேவாதபித்த சிலேற்பனநேர்மை
ஓடிவருங்கபமெண்ணி லுறுதியாக
உற்றுசிற்குநாடியென்று வுகந்துபாரே. 94

சயரோகம்.

மாயமாச்சயரோகம் வருவாறேது
மாற்றுமொருபிசனங்கள் வகைதானேது
வியனுகச்சூலையிருந்தெழுந்தபோது
வீறுடனேநீர்ச்செறிப்பு விதனமேது
பயமாகக்கனவுநினை வுற்றதேது
பார்த்திருக்கக்குணமெழுந்த பகைதானேது
நயமாகப்பொருளதெண்ணும் வகைதானேது
நன்மையுடன்பண்டிதரே நடுவதனைச்சொல்லே. 95

சயரோகமெழுந்தவகை சொல்லக்கேளீர்
தலைதனிலேகனலெழும்பி நீர்தான்வற்றி

RangaRakes tamilnavarasam.com

மயமாகவிருபுறமுந் தமருண்டாகி
மதுரமென்னும்ருசியறிந்து வாய்நீரூறிச்
சுயமாகமண்டையில் நீரிறங்கச்
சுவாசமதுநெஞ்சில்வந்து சுதறியோங்கும்
நயமறியச்சயரோகம் நடுங்குங்காலை
நன்மையுடன்பண்டிதரே நாடிப்பாரே. 96

பீனசந்தான்வரும்வாறு பொருளேதன்னில்
பேதமுற்றகனலெழுந்து வாயுசேர்ந்து
ஊனுருவிமண்டையிலே டொக்குப்பட்டு
உறுதியுடன்வாயுவங்கே யொத்துப்பின்னும்
பீனமுடனெருநீருஞ் சீயும்ரத்தம்
பிடித்துவருங்காற்றோடு மூக்கினோடு
கானுருவிவந்ததுபோல் சலங்கலங்கிக்
காயவிழும்பீனசத்தின் செய்கைதானே. 97

சூலை.

சூலைதரும்வாறதனைச் சொல்லக்கேளு
சுற்றியதோர்விசைநரம்பில் வேவுகண்டு
காலையுமேமூடுருவித் தமர்தான்விம்மிக்
களிப்பதுபோல்மாசுபற்ற யிறத்தம்வற்றி
மாலையதுபோல்தொடுத்து நரம்பின்மீதே
வகையானவிசைநரம்பை மடக்கிக்கொள்ளும்
கோலைவிட்டகுருடரைப்போல் தட்டழிந்து
குடிகெடுக்குஞ்சூலையது குறிகண்டீரே. 98

குன்மம்.

குன்மமதுதானெழும்பும் விபரமென்னில்
குடல்தனிலேகல்லுமிக நெல்லுமூக்கும்
யின்னமுடன்வயிறுப்பிச் சோரைச்சார்ந்தாக்கால்
புரளுவதுகுடலோடே மாடுபற்றும்
அன்னமதுசெரிக்காது மாசினாலே
அதுவுயரம்வுமிழுக்குக் கிருமிபுக்கும்
வன்னமலைக்குயிலாளே குன்மரோகம்
மாசற்றால்குன்மமறு வகைதான்பாரே. 99

சீர்பெறவேநீரிழிவு திரந்தானேது
சேர்க்கையுடன்தொந்தத்தில் வியாதியேது
பாரறியக்கனுமியினுற் புழுக்களேது
பண்புடனேவாதங்கள் பகைத்ததேது
பேர்பெறவேமூலத்தின் கடுப்புமேது
பிலமாகக்காமாலை பாண்டுவேது
கூர்பெறவேகுறிப்பறிந்து சொல்வீரென்னக்
கோமானயிதுபொருளைக் கூறுவீரே. 100

RangaRakes tamilnavarasam.com

சங்கையில்லாத்திரிபோகஞ் சார்ந்துயோகை
தானுருவியஸ்தியிலே தொங்கிப்பின்னை
பொங்கியதுவூனுருவித் தசையைச்சார்ந்தால்
புரைசித்துநாதமெல்லாம் பிரமைகெட்டு
கங்குலித்தபுழுப்போலே தேகமெல்லாங்
காரியங்களுள்ளுலர்ந்து கார்போல்நீரைப்
பங்கிலங்கேவுரியிட்ட நீரையெல்லாம்
பாழானவிஷநரம்பைப் பற்றிச்சாயம். 101

ஸ்திரீபோகஞ்செய்ததினுல் வேவுகொண்டு
சிரசுமட்டும்வெந்துருகக் கனலேமீறிக்
குறியுடனேமேகந்தான் கொடுமைசெய்து
குறைந்துவருந்தாதுவெல்லாங் குன்றிப்போகும்
நெறியுடனேபால்நெய்க ளிறைச்சிமீன்தான்
நெய்ச்சேத்தால்மிகுதிகொண்டால் நெருங்குமேகம்
அறிவுடனே தயிருமா மிசங்கடானு
மடிக்கடியுண்பதுவு மேகந்தானே. 102

சாகைவரலாறதனைச் சாற்றக்கேளு
தருசுரத்தில்வாய்வெழும்பி யீரல்வெந்து
ஆகமெல்லாம்வெளுப்பேறி யிரத்தம்வற்றி
அடிவயிற்றிற்கனத்துமெள்ளக் கூம்பின்மீதே
மோகமுடன்தாதுகெட் டுளமாந்தைபோல
மூட்டிவரும்கும்பதிலே வேவுகொண்டு
தாகமுறும்பசிதணிந்து கைகாலோயுஞ்
சண்டாளகுணங்கள்செய்யுஞ் சோகைதானே. 103

சோகைக்குணம்.

ஆதாரமாறுக்கும் நடுவேனின்ற
அலம்புசநாடியங்கே யசைவைப்பற்றிக்
கேதாரமூலத்தே நோக்கும்போது
கிரிச்சனமாம்வாயுவங்கே கீழேநோக்கும்
சூதகத்தில்வேவுகண்டு சுழுனையூடே
சுக்கிலத்தின்மலங்கனிந்து ஊனும்வெந்து
பாதாரமூலத்தி லடுக்கும்பின்னே
பலவிதமாய்சீழுரத்தஞ் சலமும்வீழும். 104

குருநாடி.

அந்தரமாயிடைநாடி சிரத்திலேற
அப்பசுத்தூடுசென்று பரத்தைமேவி
சுந்தரமாய்வாய்வங்கே சிரத்தினூடு
சுறுக்கெனவேயிடையினொடு நாற்றங்கொண்டு
தந்திரமாய்த்தொந்தத்தில் பதியும்நோய்கள்
சுலமுடனேசியும்ரத்தந் தொந்தமாக

RangaRakes tamilnavarasam.com

குந்திரமாயுடல்குத்து நோய்கள்செய்கள்செய்யுங்
குறிப்பறிவீர்சிரச்சூலை குணமென்றோதே. 105

சீர்பெருகுநாயகனே வாயுபுத்திரா
திறமானவத்தியென்ற நாடியோடே
பாரறியக்கடினமுறும் வன்னியோடும்
பண்புடையசிரசங்கே பதிந்துபோகும்
வார்பெரியவாயுவங்கே கபாலந்தன்னில்
வகையானவிசைநரம்பை வளைத்துப்பற்றிக்
கார்பெருகிலரும்போலே யூனுருவிக்
காற்றதனில்வந்தடைக்குங் கருதிப்பாரே. 106

நாடியென்றால்தசநாடி பத்துண்டாகும்
நலமுடனேயோர்விரலி லிரண்டுநாடி
கூடியங்கேயைவிரலும் குவித்துநிற்குங்
குறிப்பறிவீரொருநாடி குசல்களெல்லாம்
ஆடிநிற்கும்விரலைந்து ஒன்றுக்குள்ளே
அதனுடையசூட்சநிலை வாதவீட்டில்
தாடிநிற்குமாவிரல்மூன் றுகுவாய்ப்பாய்ந்து
தாதகமாய்நின்றநிலை தன்னைப்பாரே. 107

நாடிநிலையறிய.

பாரொன்றாலைந்துக்கும் நடுவதாகப்
பற்றிலன்றிவரலாறு தன்னைப்பார்க்கில்
சீரொன்றேபித்தத்தின் முன்னேநிற்குந்
தெசநாடிபத்துக்குந் தானாய்நிற்கும்
மேரொன்றால்வாதமென்று சொல்வார்மூடர்
மேவியங்கேபார்ப்பளவில் வேறாய்நிற்கும்
தார்கொண்டகுருநாடி தன்னையாய்ந்தால்
தன்வந்திரியவனென்று சாற்றலாமே. 108

பேர்பெரியகுருநாடி குணமேதன்னில்
புரண்டுவரும்வாதத்தி லட்டைபோல
சிறியமலமிருமலிரு பத்தொன்றும்
தினவுசொறிமிகுதியுண்டாந் தேகம்வாடும்
சீர்தெரியபித்தத்தி லாமைபோலே
தோன்றிடுமேல்சுரமிருக்குஞ் சுற்றும்வாழ்சீ
கார்பெருகிவருவதுபோல் வேர்வைதோன்றுங்
கதித்திடுமேல்சீர்கடுக்குங் கைகாலோயும். 109

சிலேற்பனத்திற்குருநாடி சிங்கம்போலச்
சீறிநிற்குமாமாகில் சன்னிதோன்றும்
ஆர்ப்பனத்தையூடுருவித் தோன்றுமாகில்
அசாத்தியமானகுறி தப்பாதப்பா

RangaRakes tamilnavarasam.com

கார்ப்பெணவேகுன்றன்போல் குன்றிப்போகில்
கழியும்வயிர்கடுப்பெடுக்குங் கைகாலோயும்
தேர்ப்பதுவுமில்லையில்லை திட்டஞ்சொன்னோந்
தேர்ந்தகுருநாடிநிலை தோய்ந்துபாரே. 11(

ஏற்றமுள்ளகுருநாடி தன்னைப்பார்க்கில்
இடைகலையும்பின்கலையு மிசைந்துமாறி
மாற்றமில்லாச்சுழுமுனைதான் தன்னைப்பற்றி
மாறிநிற்குங்கத்திரிகை மாறல்போலே
சீற்றமுடன்வாதபித்த சிலேற்பனமொன்றே
தெசனாடிபத்துக்குந் தானாய்நின்று
கோத்தசிறுகுருநாடி நிலையைப்பார்க்கில்
கோமான்றன்றிருக்கூத்தைக் கூறலாமே. 11

## குருநாடி-உபதேசம்.

அகாரமுதலைம்பத்தோ ரெழுத்துந்தானும்
அஞ்செழுத்துமெட்டெழுத்து மதுவேயாகும்
விகாரமுதனினைவிலொளி மதுவேயாகும்
விதமுடனேயாதார மானமாகும்
டகாரமுடன்தத்துவங்கள் தொண்ணூற்றாறு
மூர்ந்துநிற்குங்குருநாடி யொன்றுபோமே
சிகாரமெனுமட்சரத்தை நாடிவாசி
சிவமென்றநிலையறிந்து தெளிந்துபாரே. 112

## குருபதேசம்.

பார்க்கையிலேஐயுங்கிலியும் லசியமென்று
பற்றிநின்றமூலத்தி லூன்றிநின்ற
ஏற்கையுடனெட்டெழுத்தை ஓம்ஆங்உங்ரங்யநமசிவாயவென்
றிடையின்கலையின் சுழுனையூடே
தாக்கையிலேசூரியன்போல் வட்டங்காணுந்
தாடணையாய்நடனமிடுந் தவத்தைக்கண்டு
ஆக்கமுடனவிழ்தங்க ளீவாயானல்
அரகராசிவசிவா அறிந்துநோக்கே. 11:

அஞ்செழுத்தையாறியங்கே மாறிமாறி
அஞ்செழுத்தைநெஞ்சில்வைத்து அருளைப்போற்றி
அஞ்செழுத்தைச்சடத்திலங்கே நிருத்திக்கொண்டு
அருள்பெறவேயாயிரத்தெண் ணூருத்தானேதி
அஞ்செழுத்தையுருவேற்றச் சித்தியாச்சு
அவுஷதமுஞ்சித்தியா மறிந்துநோக்க
அஞ்செழுத்தாற்கற்பமுண்ண யாக்கையறியாது
அரகராவிப்புதுமை யருமைதானே. 11

இந்தமுறைசெய்வதற்கு மருந்திசித்தி
இயல்பாகசடத்துக்குச் சுத்தியாச்சு

RangaRakes tamilnavarasam.com

முந்தவேமந்திரத்தை வெளிவிடாதே
முன்னுரைத்த நூலைப்போல் கொடுக்கவேண்டாம்
அந்தரத்திலெழுநரகில் வீழாதேநீ
ஆருக்குமிந்த நூலை யீயவேண்டாம்
வந்தவந்தசிஷருக்குக் கொடுக்கவேண்டாம்
வார்த்தையினாற்பகர்வார்தான் மெத்தவுண்டு
தொந்தமுடனுன்வயிற்றிற் பிறந்தபிள்ளை
தொடுகுறியுஞ்சொல்லியுடன் கொடுக்கநன்றே. 115

ஒன்றானசிஷனுக்கு நூல்தானீய
ஒருதாரம்போல் நூறுதர மனத்தைச்சோதி
தன்றாகமன திருந்தால் தனத்தைக்கேளு
நழுகியவர்போவரென்றால் நூலீயாதே
குன்றாகச்சொன்னதைத் தருவனாகில்
கொடுத்துநீ நூல்வாங்கு நாலத்தொன்று
மன்றான சீஷனுக்கு மந்திரமீயாதே
மனந்தெளிந்துகசடற்றால் மந்திரமீயே. 116

அடுக்குமுதல்பொன்றருவே னென்பார்கள்ளர்
அவனுடையகள்ளமெல்லாம் அறிந்துக்கொண்டு
முடுக்கமுடன்வித்தையெல்லாங் கற்றுக்கொண்டு
முகம்பாரான்பொருளீயான் முன்னேநில்லான்
கடுக்கெனவே வார்த்தைசொல்வான் வயித்தியங்கைவைத்தால்
காலன்வலைக்குள்ளாவார் கசட்டுமாண்பர்
துடுக்குடனேயவனிடத்தில் சொல்லவேண்டாந்
துரோகியவன்படித்தவித்தை தூளாய்ப்போமே. 117

சீஷனென்றால்வகைகேளு தேன்போல் நெஞ்சந்
தெண்டனிட்டுப்பணிந்துமே கையுங்கூப்பிப்
பாசமுடன்குருவெனக்குத் தெய்வமென்று
பணிவிடைகளனுதினமும் பண்பாய்ச்செய்து
நேசமுடன்கனவிலுமே நினைவைவைத்து
நிலைமையுடன்தான்சொர்னங் குருவுக்கீய்ந்தோன்
வாசமுடன்குருகற்றவித்தையெல்லாம்
வளர்ந்துமங்கேடலைபோலே செல்வமாமே. 118

செல்வமுடன்வித்தையுண்டாஞ் சிறப்புண்டாகுஞ்
செகத்திலேகண்டவர்க்குச் செல்வனாவான்
சொல்வதென்றால்வானவர்க்குஞ் செல்லுந்தூது
தொல்லுலகிலவனெனவுஞ் சுருதியாகும்
கல்வியென்றகல்வியெல்லாங் கருத்திற்றோன்றுங்
கனவினில்வைத்தியமுங் கைக்குள்ளாகும்
நல்லவனென் றுலகமெல்லாஞ் சொல்வார்சொல்வார்
நற்குருவின்மனந்தெளிந்தால் நன்மைதானே. 119

RangaRakes tamilnavarasam.com

திருட்டினால்வந்ததொரு சீஷன்றானுஞ்
செகத்திலேபொய்யுரைத்து மெய்பேசாமல்
மருட்டினால்குருதேடி வருவான்மட்டி
வார்த்தையினால்வாய்ஞானம் பேசிக்கொண்டு
உருட்டதனால்குருமனத்தை மருட்டிக்கொண்டு
ஓகோகோவித்தையெல்லாங் கைக்குள்ளாக்கி
குருட்டானமாபாவி குருவுக்கென்று
கொடுக்காமல்மனதெரியக் கொண்டானே. 120

வித்தைதனை திருட்டாலே வேண்டிக்கொண்டு
விதமறியுங்குருவாசன் மனதுநோக
சத்தியந்தான்மறந்துவிட்ட சண்டாளன்றான்
தாரணியில்மானிடர்க்கு மருந்தையீந்தால்
சித்திதான்வாராது பிணிதான்மிஞ்சிச்
செகத்திலுள்ளபேர்களெல்லாம் நகைப்பார்தானும்
முத்தியும்வாராது மகாநோய்கொண்டு
முறையானவவன்குடும்ப முழுதும்போமே. 121

நாடியிடசூட்சநிலை பகுந்துசொல்வே
நன்மணிக்கடைநாலு விரலைத்தொட்டு
கூடியதோர்மணிக்கூட்டில் விரல்தான்போட்டு
கூறுடனேமூவிரலுங் குவித்துப்பார்க்கில்
தேடியதோராணுக்கு வலக்கரமேயாகுந்
திறமுடையமங்கையர்க்கு இடக்கரமேயாகும்
கூடியதோர்வாதபித்த சிலேற்பனத்துள்ளே
கொட்டிநிற்குங்குருநாடி துறந்துபாரே. 122

ஒன்றுக்குமெட்டாத நாடிநேர்மை
யூடுருவித்தாண்டிநிற்கு முண்மைகேளு
வண்டுதான்மதுவருந்து நேர்மைபோல
வாதபித்தசிலேற்பனத்தில் மதுவுண்டாற்போல்
என்றைக்கும்வாதபித்த நடுவேநிற்கு
மேறுவதுங்குறைவது மில்லைசொன்னேன்
கன்றுக்குப்பால்சுரக்கும் பசுவைப்போலே
காத்திருக்குங்குருநாடிக் காலைப்பாரே. 123

குருநாடிநிலையறியாக் குருடரெல்லாங்
கூட்டமிட்டுச்சாத்திரம்பேய்க் குசல்கள்செல்வார்
குருநாடிவாதபித்த சிலேற்பனமூன்று
மத்திமமேதானறியார் வார்த்தைசொல்வார்
கருநாடி குருநாடி யாகங்காணுங்
கைம்முறையாய்க்கருத்தொருமைகாட்டக்காணும்
பெருநாடிசாத்திரத்திலே மயங்கிப்போவார்
பித்தரேகுருநாடி பின்னல்பாரே. 124

RangaRakes tamilnavarasam.com

வாதபித்தமிரண்டுக்கும் நடுவேயார்க்கில்
மதுவுண்ணும்வண்டதுபோல் மத்தியத்தில்
போதமுற்றமூவிரலு முருவிப்பாய்ந்து
பூரணமாய்மூலமுத லுருவித்தாண்டிச்
சாதமுற்றவிஷநரம்பு னூடுசென்று
சந்திரமண்டலமேவிச் சார்ந்துபின்னும்
நாதமுறைகுருநாடி யெங்குஞ்சுற்றி
நடுவில்வரும்நேரதனை நாடிப்பாரே. 125

நூலொன்றுந்தப்பாது கைகாட்டிக்கொண்டால்
நூதனமாய்ப்படித்தவர்கள் நுழையமாட்டார்
வாலென்றுந்தலையென்று மறியாமூடர்
வார்த்தையினால்மருட்டிவைப்பார் மற்றபேரை
சேலொன்றுமறியாத புத்தகப்பேய்
சிங்கத்தைநரியெதிர்த்த செய்கைபோல
மாலகன்றகுருநாடி தானும்சொல்லும்
மற்றொருவரெதிரினில் வழுத்துங்காலே. 126

குருமுறையாய்க்குருநாடி தொட்டுக்காட்டிக்
கூறுகக்குருநாடி குலுங்கச்சொல்லித்
திருமுறையாய்மூவிரலுஞ் செய்கைசெப்பிச்
சித்தாந்தவேதாந்தஞ் சடத்திற்காட்டி
மருள்நாடியிருள்நாடி யிரண்டுந்தாண்டி
மாற்றமில்லாக்குருநாடி மதியுங்காட்டி
ஒருநாடிமூவிரலு முருவிநின்ற
உண்மையறிந்தவர்க்குநீ யுரைக்கொணாதே. 127

பராபரமாய்க்குருநாடி பண்ணிப்பார்க்கில்
பக்கமிடக்கீழ்மேலும் பாய்ந்தநேர்மை
தராதரமாய்விரல்மூன்றுந் தன்னைப்பார்க்கில்
சாதகமாயோர்விரலுக் கைந்துகாணும்
நிராமயமாய்விரல்மூனையு மிடமும்வாதம்
நின்றநடுபித்தமென நிறைந்துகாணும்
வராயகமேலேற்பவது வலமும்பின்னும்
வகைபார்க்கில்மூவிரலுஞ் சீரைப்பாரே. 128

வேறு.

மன்னியமுன்கைகீழே மணிக்கடையதிலுமப்பால்
பின்னியேபிரிமூறுக்காய்ப் பெலத்துமுக்கணமும்தோன்றிற்
சென்னியும்பிடரிற்சுற்றித் திசைதோறுங்கயிர்போல்வீசும்
உன்னியேயெழுபத்தீ ராயிரமுருமுற்றதாமே. 129


RangaRakes tamilnavarasam.com

உற்றதோர்வாதந்தன்னி லுருதியாய்க்கீழுமேலும்
நத்தியநாடிதானு நயம்பெறமன்னங்கோழி
பற்றிடுமயிலும்போலப் படருநன்னாடியோடுஞ்
சித்துருமாமையட்டை தெண்டுடனோந்திபோலாம். 130

சிலேற்பனநாடிதானுந் திரளுடன்சில்லூர்ப்பாம்பு
தாற்பெனத்தவளையூணி தயவுடம்சாடுமாப்போல்
கார்பெறுமிவைகள்மூன்று நாடியின்குறிப்புகண்டு
ஆர்ப்பனந்தெளிந்துநீயு மறிவுடனமர்ந்துநோக்கே. 131

திருநாடிநேர்மைசொல்லச் சிவனயன் மாலுமாகுங்
குருநாடியானவாறுங் கூர்ந்திடுகருவிற்றோன்றி
வருநாடியைந்துதானே வகுத்திடும்பூதமஞ்சு
உருநாடிபத்துந்தானே யுறுபிணியேறிநிற்கும். 132

எழுந்திடுஞ்சத்ததாது இயல்புடன்சொல்லக்கேளீர்
வழுந்திடுந்தோலெலும்பு தசையொடுநரம்புபச்சை
அழுந்திடும்யாக்கைமுற்றி யானதோர்தாதுநேர்மை
குழிந்திடுமயிர்நெய்யோடு சுக்கிலஞ்சிறுநீராமே. 133

இப்படித்திசையுநாடி யெழும்பியேயிடையினோடு
சொற்படிகலையுமாறிச் சுழினையுஞ்சுற்றிமாறி
முற்பனவீணையோடே மண்டலமூண்டியேங்கி
அப்படியத்திசிங்கி யலம்புடைபுருடனாமே. 134

ஆக்கியநாடிதானு மறுநான்குமொன்றுமாகில்
தாக்கியகருவிலாகித் தத்துவந்தன்னைச்சார்ந்து
ஏக்கியவெழுபத்திரா யிரம்நரம்பைச்சார்ந்து
கூக்கியபம்பரம்போல் குறுகிடும்சைவப்பாரே. 135

பம்பரமீதிலந்தக் கயிறுதான்சுற்றிவீசித்
தம்பரமாகத்தானே கிறுகிறாய்சுற்றிநிற்கில்
அம்பரமானவாத மதுவெனவறிந்துகொள்ளு
நம்பரம்பித்தந்தானு நடுநாராய்ச்சுற்றியோடும். 136

உன்னியேயெறிந்தபோது ஒருசுற்றுகுண்டுசுற்று
மன்னியேசுற்றிவீழ்ந்தால் சிலேற்பனங்குருதியாகும்
தன்னியமரணம்பார்க்கில் நழுகிடுமுடனேவீழும்
மன்னியவயிறுபார்க்கி லப்படிவிசையைப்பாரே. 137

வயதுதாறுறேயானால் மங்கையைமருவுநேரம்
சுகமதாய்சுக்கிலந்தான் சுறுக்குடன்முறுக்கியேறும்
கயிறெனத்தொய்யவீழிற் கண்டிடும்பித்தஞ்சாகும்
வயதிதுவிருபத்தஞ்சி வகுத்தறக்குறித்துப்பாரே. 138

ஒன்றுக்குமுக்காலாகி லூரமதுகுறைந்துசாடும்
மன்றுக்குள்தனிலத்தாளில் வயதுமிப்படியேயாகும்
துன்றுக்குள்பாதிக்குள்ளே தொய்யவேயருகிவீழில்
புன்றுக்குமாரத்தொன்றும் வயதெனக்குறித்துப்பாரே. 139

RangaRakes tamilnavarasam.com

இப்படிபம்பார்த்தா னேற்றமுந்தாழ்ச்சிகண்டு
அப்படிநாடி தானு மமர்ந்திடும்செய்கையாகும்
முற்படிமுன் னும்பாய்ந்து முழுதுமேகுறித்துப்பார்த்து
சொற்படிசெய்வாயானால் நாடியின்றொகுத்துத்தோன்றும். 140

வேறு.

குருநாடிதிருநாடி குறிதான்மேலும்
கொண்டபஞ்சநாடியென்றுஞ் சத்ததாது
திருநாடியானதுவே திறமாய்த்தேர்ந்து
சித்தாந்தகுருநாடிச் சீரைப்பார்த்து
வருநாடிபஞ்சபூத நாடியென்றும்
வகுக்கலாந்தசநாடி வகுப்புமெத்த
கருநாடிகுருநாடி யாகக்காணும்
கண்டவர்க்குமெஞ்ஞானங் கருதலாமே. 141

பம்பரம்போற்குருநாடி கிறுகிறென்று
பற்றிநிற்கும்வாதபித்த நடுவிற்றானே
அம்பரம்போற்குமிழியெனும் வாதபித்த
மையமெனுநாடிமுத வியாவுமோடிக்
கம்பமுதல்மண்டலங்கள் மூன்றுஞ்சுற்றிக்
கத்தரிகைமாறலெனக் கட்டிச்சேர்ந்து
தம்பமுடன்வாதபித்தங் கருவிற்பாய்ந்து
தமரகம்போலோடிநிற்குந் தன்மைதானே. 142

தொண்டையிலேசோறிறக்குங் குரலைநோக்கிச்
சூட்சமுடன்கையைவைத்துச் சுகமாய்ப்பார்க்கில்
கொண்டெழும்வாதமெனும் நாடிதானே
கோழிக்குரல்போல்பார்த்தாலு மதுபோல்வாதம்
மண்டியிடிக்காரர்தலை கையைவைத்து
வகையுடனேதரிப்பதுபோ லதிரும்தத்தம்
ஒண்டையிலேதவளைதனைப் பாம்புசென்று
உறுதியுடன்தின்றாற்போ லொக்குஞ்சிலேற்பம். 143

முன்னுரைத்தநூல்களெல்லா மனைத்துஞ்சொன்னோம்
முதுமொழிதான்கற்றவர்க ளறியலாகும்
நன்னூலாங்குருநாடி தேர்ந்தபேர்க்கு
நடுவெளிபோற்றேர்ந்துசொன்னோம் நாடியெல்லாம்
அன்னல்மொழிமாதுனக்கு எடுத்துசொன்னோங்
கருதியேபார்ப்பளவில் கடினமெத்த
பின்னலாய்வெகுகோடி பிடித்துச்சொன்னோம்
பாருடனீராராய்ந்து போற்றிக்கொள்ளே. 144

குருநாடிவாதத்தில் நிற்கும்போது
கொம்பசைந்தவாறொக்குங் கூர்ந்துபாரு

RangaRakes tamilnavarasam.com

குருநாடிபித்தத்தில் நிற்கும்போது
குயில்போலேவெனும்புமது குறிப்பைப்பாரு
குருநாடிசிலேற்பனத்தில் நிற்கும்போது
குளிர்ந்தசலம்போலிருக்குங் கூர்மைபாரு
குருநாடிமூன்றுக்குஞ் சரிபோல்நிற்கில்
கோகோவெனக்குழறுங் குணத்தைப்பாரே. 145

மரணக்குறிப்பு.

மரணமதுஅறிவதற்குக் குறிப்பைச்சொன்னோம்
வழுவாகவிசைநரம்பு குலைந்துதானே
விரணமென்னும்பொறிகளெல்லாந் தளர்ந்துமெத்த
விசைநரம்புதான் குலைந்து விரைந்துவாங்கி
நாணமெனப்பற்கடித்து மணியுநட்டு
நாவுலர்ந்துமூச்சடர்ந்து நடுங்கிக்காணும்
துரணமெனவாதபித்த சிலேற்பனமெல்லாந்
துடித்துவரும்விட்டிலைப்போற் றுடிக்குந்தானே. 146

சன்னியெழும்போதிலந்த நாடிமூன்றுஞ்
சாதகமாஞ்சுழல்வண்டு தண்ணீர்மீதே
உன்னியதுசுற்றிவரும் போலேயோடி
உள்ளிறங்கிப்படபடென முட்டியேறும்
மன்னியசிலேற்பனத்தில் நாடிதானும்
வழுவாமலேதிரேறி வாதவீட்டில்
பின்னியதுவாதத்தை யழுத்தித்தாழ்ந்து
பேதிக்கில்மரணமென்று பிரித்துச்சொல்லே. 147

வேறு.

சூத்திரநடுவேதோன்றி விளங்கியேயகலுஞ்சீவன்
மாத்திரைமணியீயம்போ லதுதோன்றிநிற்குஞ்சீவன்
வேற்றுருக்கண்கள்ரண்டு மணியதுநட்டுநின்றால்
யாற்றிரைமூன்றினுள்ளே யகன்றுபோமெல்லிநல்லாய். 148

நெற்றியில்நரம்பிரண்டும் நீலமாய்க்கலர்போல்தோன்றில்
அற்றிடுந்தேகம்விட்டே ஆறுமாத்திரையிற்சாவு
சுற்றியவளையம்போன்று சூழ்ந்துவரநுதலிலீளம்
பற்றியேகாணுமாகிற் பகருஞ்சுதிங்களேழே. 149

பத்தியாய்க்கண்டம்நொந்து பதைத்துமேதுடிப்புமுண்டாம்
வற்றியேவெளுத்துக்காயும் வளையதுசுருங்கலாகி
இற்றியபுருவந்தாழ்ந்து புருவத்தின்மையம்நீளிற்
சத்தியமாதம்நாலில் தருணத்தில்மரணமாமே. 150

பெறுக்கவேமுகங்கறுக்கிப் புலால்போலாய்மூத்திரத்தில்
திருக்கைபோல்மடநல்லாளே திங்கள்மூன்றதனிற்சாவு
லருக்கவேமுகம்பெறுத்து வகையுடன்வெளுக்குமாகில்
மறுக்கவேதிங்கள்தன்னில் மரணமுங்காணுங்காணே. 151

RangaRakes tamilnavarasam.com

முகத்தடிபெறுத்துக்கண்டு முகமெல்லாம்வெளுப்புமாகி
நிகத்தமாய்ப்புருவங்காணில் நெறியானமாதமிரண்டாய்
அகத்தினிலுணர்வுமுற்று மடிக்கடிசுவாசமூட்டில்
செகத்தினிலறியச்சொன்னேம் சிவனுமகனுந்தானே. 152

நாசியின்சுழியிரண்டில் நடுச்சுழியோங்குமாகில்
பேசியசீவன்விட்டுப் பிரியநாள்முப்பத்தொன்றே
மாசதுவிழிகள்மூக்கு வற்றியேகருத்துக்காணில்
ஊசலிலெதிர்த்தாற்போல உடம்பைவிட்டுயிரும்போமே. 153

வார்த்தைநான்சொல்லும்போது மார்புக்குளடைத்தாற்போல
ஊர்த்தமாயெழும்பாதாகி லுயிர்விடுமாதமூன்றில்
சேர்த்துறைசெய்யிலற்ற திடமன்னர்தங்கள்போலச்
சார்த்தினேன்மாதம்ரண்டிற் சடத்துயரகலுந்தானே. 154

சொல்லிலேநாத்தடித்துச் சொற்றடுமாறுமாகில்
மெல்லநாவரட்சிகாணில் வீழ்வதுமாதமூன்றில்
மல்லெனவரைக்கவுந்தான் மந்தமாய்மக்கமாகில்
அல்லினுங்குழலாமென்றே யடைந்திடுமரணந்தானே. 155

மேனியுமிகப்பெருத்து விம்மியேகழிந்துபின்னும்
யூனிலாச்சோகமாகில் ஒருவருஷத்திற்சாவான்
பானநீருடலிற்றுவிப் பாவையினுடல்போற்காணில்
ஆனியாமாதம்பத்து வறுமாதமென்றுகூறே. 156

மெய்யெல்லாம்பசுமையாகி யிறைந்திடுமயமுமாகிக்
கையடிசுருங்கிக்காணிற் கருதுவெண்மாதஞ்சாவான்
நெய்மயம்வேர்வைகண்டு நெஞ்சுயர்ந்திருடால்வற்றித்
துய்யதோர்ரூபமாறில் துயர்வருமாதமாறே. 157

இருவிரல்மேலெலும்பு மிரண்டுமேயுன்னிக்காணில்
உரைசெய்யுமாதமூன்றி லுயிரதுமரணமாகும்
மருவியகண்டம்நீண்டு வற்றியேமிடருந்தாழ்ந்து
திரையெனத்தோற்சுருங்கில் செப்புவர்மாதம்ரண்டே. 158

பொருத்தெல்லாம்நெகிழ்ந்துகாணில் போர்கழன்றிருக்குமாகில்
துருத்தம்போலெய்ப்புகாணில் துஞ்சுவர்மாதமொன்றில்
குருத்திரள்நடத்தல்தன்னில் எழும்பவத்தியக்கங்காணில்
வருத்தமாய்த்துயரங்காணில் மரணப்பத்திருநாளென்றே. 159

காயத்திலடிசுருண்டு கருத்துத்தோற்சுருங்கிக்காணில்
பேயொத்தநிறமுமானால் பிரியுநாள்பத்திற்சிலன்
நோயற்றோரெனினுமேனி நடுங்கியேமார்புதாழ்ந்து
ஓய்வுற்றுப்பதறிக்காணி லொடுங்குறேயுயிர்காளஞ்சில். 160

கண்டத்தில்நரம்பிரண்டுங் கதிக்கவேவிரைக்குமாதல்
பிண்டத்தில்சீவன்விட்டுப் பிரியுநாளாறுமென்க
தண்டொத்துக்காரையேழுந் தடித்ததுவுயர்ந்துகாட்டில்
பண்டொத்ததருணத்தாலும் பகிருநாளில்வீழ்வார். 161

RangaRakes tamilnavarasam.com

உடம்பெல்லாம்பதறிக்காணி லுன்னடியுன்னித்தாளில்
நடந்திடில்கால்பின்சாயில் நாளொன்றிற்சாவாந்திண்ணம்
திடம்படவிருக்கிலுந்தான் தேகமேகுறுகிக்காணில்
யிடம்பயில்கண்ணிறுளே வீழும்நாளஞ்சுதானே. 162

மலத்துடனெய்தான்போல வரிநீலம்போலேவீழ்ந்தால்
உலத்தியசடத்தைவிட்டு உயிர்நீங்குமாதமாறில்
கொலக்கொடியணங்கிகல்லாய் குழுக்கெனச்சோரைவீழில்
சலத்தகுமாதமஞ்சில் சாவதுவுண்மையாமே. 163

அரைத்தசோறதுபோல்வீழி லவிழ்தழுஞ்செய்யிற்றீரா
திரைத்திடுந்திங்களுளி லேகிடுமரணமென்க
கரைத்திடுங்கூழ்போல்வீழ்ந்து கலங்கியேபொருழுமாகில்
உரைப்பதுமாதமூன்றி லொடுங்கிடுமுயிருந்தானே. 164

வெள்ளைதாணிரைந்துவீழ்ந்து விலாவுள்ளேசொருகிக்குத்திக்
கள்ளனநெஞ்சிற்றுவில் துருவறமாதம்ரண்டில்
கள்ளனத்துறையிற்கம்பங் கஞ்சிபோற்கழியுமாகில்
வள்ளிடுமாதமந்தத் தியல்பென்றுசொல்லுவாரே. 165

நினைக்குமுன்சுழியுமாகில் நீர்நிறங்கரியைப்போலத்
தினைப்படிசுழியுமாகில் செய்யுநாளிருபதென்க
பனிச்சலமன்னன்வீழ்ந்து பன்றிநெய்படர்ந்ததொத்தால்
மனத்தினிலெண்ணவேண்டா மரணநாள்பதினொன்றே. 166

குக்குடத்தேசம்போன்று குருத்தினைபரிசிபோலும்
ஒக்கவேயிரத்தஞ்சீழு மோடிடில்நாள்பத்தாகும்
தொக்குளேசுருகிக்கொண்டு துருத்தினீபன்னம்வீழ்ந்து
மிக்கதோர்மயக்கமாகில் வீழும்நாளேழாமென்னே. 167

எடுத்திடுங்கழிச்சலற்று இறுக்கிப்பின்கழிந்துள்ளாகி
நடுக்கிறேமயங்கிக்காணில் நவிலுவார்நாளஞ்சேதான்
உடைத்தகூழ்முட்டையேபோல் ஊன்வெடிநாற்றம்நாறில்
அடிக்கடிசுழியில்தானே யறுதிநாள்மூன்றதாமே. 168

பச்சிலையரைத்தாற்போலப் பலபலநிறமதைப்போல்
கெச்சிடிநாற்றமாகக் கழிந்திடில்நிசமாய்ரண்டே
வெச்செனத்தும்பிக்கொண்டு மிகமலஞ்சுவாயம்போல
மிச்சமாவிகற்பமாகில் வீழுநாளன்றுதானே. 169

மண்டையில்சலம்போல்நாறில் மதுவெனநீர்தான்வீழில்
தண்டுளேயடைந்துவீழில் சாவுசொல்மாதம்ரண்டில்
கெண்டியில்நீர்போல்வீழ்ந்து கீழ்றுரையற்றதாலே
கண்டுகொள்மாதமேழிற் கழன்றிடுமரணமெய்யே. 170

குறிப்படிஆய்ந்துநீரில் குளிர்ந்துதானறியாதாகில்
அறிவொடுகழியுமாகி லகலுநாளாறுமென்க
வெறிகமழ்மலர்ப்பூங்கோதாய் விளங்குமப்பலகுணத்தால்
செறியுயிர்மாளுமென்னச் செப்புவார்புவியுள்ளோரே. 171

RangaRakes tamilnavarasam.com

இரும்பினில்மலர்ந்துகாய்ந்து எழில்முகங்கவிழ்ந்துக்கொண்டு
ஒருபுறஞ்சாய்ந்துகால்களூண்டியேமடக்கிக்கொண்டு
விருப்பொடுகருகிமுக்கு விரைந்துகைவைத்துக்கொண்டு
திரும்பியேதிரும்பிக்கொண்டு மருந்திடிற்சேர்வார்நோயில். 172

சார்ந்துகால்முடக்கிக்கொண்டு சந்தடியூடிகையைச்
சேர்ந்திடவைத்துக்கொண்டு சிக்கெனக்கால்கள்கட்டிப்
பாய்ந்திடுந்தவளைப்போலப் பரிவுடனிருப்பானாகில்
காய்ந்திடுவார்கள்நோயி லென்றுதான்முன் னூல்சொல்லே. 173

நடக்கினில்சொரூபமன்றில் நடையது தாழ்ந்ததாக
அடக்கமாய்நடப்பானாகி லகலினிற்றவர்வானாகில்
சடத்தொருபுறமேசாய்ந்து சத்தெனநடப்பானாகில்
திடப்படத்தெளிந்துகொண்டு நடக்கிலுஞ்சேர்வார்நோயில். 174

மலர்ந்துதான்கைகள்ரண்டு மார்பில்வைத்துறங்கலாலும்
நிலந்தனிற்கவிழ்ந்துகைகள் நெற்றிவைத்துறங்கலாலும்
பலந்தரவிழித்தாற்போலக் கிடந்துறங்கதலாலும்
மிளங்கிளையனைத்தாய்நோயில் விழுந்திடுவார்கள் திண்ணம். 175

வாயினாலூதலாலும் வருந்திப்பற்கடிக்கையாலும்
தீயதோர்நெடுமூச்சிட்டுச் சேர்த்ததோராடிவன்னி
ஊயலாதுறங்கையாலு முருவகக்காலைமாலை
நேயமாய்த்துயில்வதாலு நிச்சயம்நோயிற்சாவார். 176

மாலையில்நிசிகாலத்தில் வளர்விசைக்கடிகைதன்னில்
சாலவேபசியாம்போது சகசமாம்வேளைதப்பிப்
பாலெனுமமிர்தமன்னம் பண்புடனருந்துவோர்கள்
தூலமாய்நோய்க்குள்ளாகிச் சுழன்றுழன்றலைவர்மாதே. 177

சுடலையிற்கழுப்பக்கத்திற் சூழ்ந்தபேய்க்கூட்டத்தில்
இடமுறுகலவிசேரா ஷத்திரிசரசஞ்சொல்லாம்
அடிமையாய்த்தெய்வமுற்றோர் மகத்துவமுள்ளோர்
விடமெனத்தூஷித்தாலும் விழுவர்நோயில்மின்னே. 178

மருண்டவர்போலப்பேசுஞ் சினத்தை.

மனதினிற்சூதையற்று வரும்பொறிகலக்கமாகி
நினைத்திடும்வெருட்சிகொள்ளில் நிறத்தசைவாயுவான
மனத்தைவைகுணங்கள்காட்டி லெழும்பலநோய்களென்ன
வனைத்தையுங்கருத்துஞ்சொல்லும் மகாமுனிகும்பன்சொல்வான்.

உரப்பவமும்மலத்தி லுற்றதோர்மலத்தைப்பற்றி
நிரப்பலத்திலாய்ந்து நிலைப்பிலாமாதராவார்
அதப்பவம்மும்மலத்தை யடுத்துமேவசமாய்நிற்பார்
முரப்பவமலத்தின்மேவார் முன்னில்லார்கோயிலன்றே. 180

ஆணவமதனினாலு மறிவிலாமாய்கையாலும்
பூணுங்காமியத்தினாலும் பொறுப்பெருநோயில்வீழ்வார்

RangaRakes tamilnavarasam.com

ஆணவம்பித்தமானசை யதுவாதமென்பார்மேலோர்
காமியஞ்சிலேற்பனமென்றுங் கருத்துடன்புகன்றதாமே. 181

சினத்தெழுங்கோபத்தாலுஞ் சிற்றின்பமிகுதியாலும்
கனத்திடுஞ்சுமைசுமந்து கருத்துவேறுகையாலும்
மனத்தெழுதுயரத்தாலும் வறுமைக்குளாகையாலும்
தன்வினைநோய்க்குள்ளாகி வேதனைப்படுவார்நாளும். 182

அப்பங்கன்மானநாளி லைப்பசியானபோது
வெப்புறுவெளியிற்சென்றே விரைந்துதானடந்தநாளில்
செப்பியல்வாயார்போகங் கொள்ளவேநடந்தநாளில்
துப்பிதழ்மடவாரோடே தோய்ந்தவர்நோயிற்றேய்வார். 183

உண்டநீர்கொள்கையாலு முண்டபின்கொள்வதாலும்
தின்றவுன்குறைதலாலுஞ் சிறப்பிடுமெய்யினாலும்
நன்றியகல்விபோகம் நாளுமேகழித்ததாலும்
என்றுமேநோய்க்குள்ளாகி யிறந்திடுவார்கள்மாந்தர். 184

வியாதிக்கூறறியநாடி.

இப்படிவருநோயான வெண்ணிலாக்கடலுட்சென்று
குப்புறவிழுமுன்னேடிக் கொள்பவர்மனிதரோகஞ்
செப்புவர்முனிதாமுன்னாள் செந்தமிழ்மாறிச்சூழ்ந்து
வப்பிணியுணர்ந்தோர்சேர்வார் நமனென்னும்விண்ணில்மாதே. 185

வேறு.

நீர்மேகமானவர்க்கு நாடிதானும்
நிர்ணயமாய்நாடியெல்லாம் பொன்மைகேட்டு
கார்மேகம்போல்வந்த பொறியின்மீதே
கழன்றுவிழும்பொறிபோற லோட்டிதானுஞ்
சீர்மேகஞ்செறிந்தமென்றால் கருதுநூல்போல்
சிறிநிற்குங்குருநாடிச் சேர்ந்துதானும்
போமேகக்கடுத்திடுகில் வாதபித்தம்
பின்னியதுதுடித்துவரும் பிரிவுதானே. 186

கெர்ப்பிணிக்குவாதபித்தங் கிளர்ந்துகாணும்
கிராணியதிசாரமென்றால் தளர்ந்துகாணும்
உற்பவித்தசயமீனை காசரோகம்
உற்றடுசிலேற்பனந்தான் மீறிக்காணில்
நற்பிடித்தரோகமது நலிந்துகெட்டு
நாவுலர்ந்துசயமீனை நாற்றம்ரோகம்
மற்பிடித்தவிஷநீருஞ் சோகைதானும்
வந்திடில்பித்தமுடன் சிலேற்பனமதாமே. 187

சிரரோகமானாலும் வாதபித்தஞ்
செறுந்துநிற்கும்நாடியது சிறித்தானே

RangaRakes tamilnavarasam.com

விரரோகங்கிரந்திகுஷ்ட மானபேர்க்கு
 மீறிநிற்கும்பித்தம்ரண்டு வாதமொன்றும்
தாரோகஞ்சூலையொடு வாதரோகம்
 சார்ந்திடுகில்வாதபித்தந் தழைத்துக்காணும்
வரரோகம்வாயுவென்றால் வாதங்காணும்
 வாகாகவின்னதென்று அறிந்துபாரே. 188

உற்றதோர்கபந்தனக்குச் சேரும்பித்தம்
 உறுதிபெருவிக்கலுக்குச் சேரும்வாதம்
மற்றதொருசாந்தனுக்கு வாதபித்தம்
 வகையானகணைதனக்குப் பித்தம்வாதம்
சித்தமொருமதகரிக்குப் பித்தமாகுஞ்
 சீரானகௌசிரோகந் தனக்குப்பித்தம்
குற்றமில்லையிதுமுறையைப் பகுத்துச்சொன்னோம்
 கும்பமுனியருட்கணீ கூர்ந்துபாரே. 189

காணிகத்தில்வாதமென்றால் சிலேற்பனவாதங்
 காணைசூலையானாலுஞ் சிலேற்பனவாதம்
விரணமுடன்நீர்ப்பாடு கோட்பாடானால்
 விண்டிட்டநாடியெல்லாந் தளர்ந்துகாணும்
தரணமுறும்பாம்புவிஷங் கொண்டபேர்க்குத்
 தாதுவெல்லாங்காணமற் றளர்ந்துபோகும்
ஆரணவடமொழிநூ லுரைத்தவாறு
 அறிந்துரைத்தோம்வயித்தியரா மறிவுள்ளோர்க்கே. 190

காணகத்தில்சுரோணிதத்தின் வாதமானால்
 கதித்துநிற்கும்வாதபித்தம் ரண்டிற்சேரும்
விரண்டுமொருமண்டைவலி வெடிசூலையாகும்
 விகற்பமுடன் விஷநீர்கள் வறட்சிகாந்தல்
தருணமுறுமுக்கடைப்புத் தந்தரோகம்
 சதையடைப்புச் செவிப்புற்றுப்பற்பரோகம்
மாணவரும்போதளவும் போகாதென்று
 வயித்தியரேயிந்நூலை மகிழ்வித்தோமே. 191

முன்னாளிற்செய்தகுறை கர்மத்தாலே
 முறையானவெளுப்புவருங் கர்மத்தாலே
இந்நாளில்விஷப்பூச்சி செனனந்தானும்
 இசைந்தவட்டையுடன் விஷமெறும்புதானும்
தன்னாளில்மிகுந்தபுழுக் குவிந்தசெங்கோண்
 தான்கடித்தவிஷதோஷஞ் சாற்றக்கேளு
அந்நாளிற்புடையனொடு மண்ணுளியுஞ்சீண்டி
 லதினாலேவருநோயை யுரையக்கேளே. 192

கால்தனிலேகடித்தாக்கால் திமிருண்டாகும்
கைதனிலேகடித்தாக்கால் விரற்குறுகும்
மேல்தனிலேகடித்தாக்காற் றடித்துக்காணும்
மேன்மையுடன் றலைநீண்டில் சிரங்குபுண்ணாம்
பால்சொரிந்ததாடைதொடில் பொரிந்துகாணும்
பாதத்தில்தான் தீண்டில் பலநோயாகும்
மேற்சிறந்தவிஷபூச்சி கடித்ததோஷம்
மெல்லியரேகுரையோயென் றுரைக்கலாமே. 193

## விஷப்பூச்சிதோஷம்.

பாழ்முறையால்குறைமுடிக்க வந்ததோஷம்
பாரிலுள்ளோர்பரிகாரஞ் செய்வதேது
ஊழ்வினையாலூடாடிக் கொல்லவந்த
உகமையதுவரியாமல் ஆகஞ்செய்தால்
தாழ்வினையூடறுவதில்லை கடினமாகும்
கற்றறிந்தபெரியோர்கள் கண்டுகொள்ள
ஆழ்வினைகளறிந்துமெள்ள வகன்றுபோவீர்
அரசருனையாரறியப் போகாதாமே. 194

விரல்குறுகுங்கால்திமிராம் விஷம்போலேறும்
மெய்பருத்ததலைசுழலும் வியர்க்குமேனி
பால்போலத்தேகமெல்லாந் தடித்துக்காணும்
பதகுபோம்வெளுத்துமிகப் புண்ணுமாகும்
சரசமுடன்பொரிகரப்பான் போலேதோன்றும்
சத்தைதரும்விந்துகெடுந் தடித்துவீங்கும்
நாருலகிற்பூசைசெய்ய வேண்டும்சொன்னோம்
நாடிவந்தகுறைநோவு நாவிற்றூமே. 195

கற்புடையமங்கையரை விருப்பமுற்றுக்
கைம்மருந்திட்டுமிகக் காமத்தாலே
முற்பிழைபாற்குறைசெய்த காமத்தாலே
மூளுவதுபாவந்தான் சிலந்திபோலே
துப்புடனேசிலந்திவண்டு கடித்ததோஷம்
தொல்லுலகில்யாராலுந் தொலைக்கப்போகா
நற்புடனேயிதுவறிந்து பரிகாரங்கள்
நன்மையுடன்பாவந்தீரத் தவங்கள்செய்யே. 196

காகம்போல்தேகமது கறுத்துக்காணும்
கனத்தநடுவுடல்குளிர்ந்து தடித்துச்சுற்றும்
ஆகம்போனிரத்தமெல்லாம் வெந்துபோகும்
ஆக்கையுறும்மதனில்மிக வசைந்துபோகும்
கூசமதுகால்கரங்கள் நடக்கில்மெத்த
கொடியநீர்விஷகரப்பன் கொள்கைபோல

RangaRakes tamilnavarasam.com

பேதமதுமுற்பிழையால் மிகுந்தபாவம்
பெரியேரைதூஷித்த பேதந்தானே. 197

நல்லோர்கள்பெரியோர்கள் நடத்துஞ்செய்கை
நாட்டிலுள்ள துஷ்டஜெனம் நகைத்ததாலே
பொல்லாதவிஷக்கடிகள் வந்துபுக்கிப்
பொன்மையுள்ளதேகமெல்லாம் குஷ்டம்போலே
செல்லாதவிஷக்கடிகள் விஷகுன்மம்பாண்டு
தீராதகன்மவினை செய்தபாவம்
எல்லாருங்காணவிது புவியின்மீதே
இணங்கிவந்தகடிவிஷங்காளியம்பலாமே. 198

ஆறிவார்பெரியோர்கள் செய்கையெல்லாம்
அம்புவியிலுபமானப் பொருளறிந்தால்
ஊறியப்பேறிய வுலகமெல்லாம்
உடனகைத்துச்சிரிக்கவென் றுலகப்பேய்கள்
சீறியச்சிறியோர்கள் பெரியோர்தம்மை
சிரித்துநகைத்திடவெகு பாவத்தாலே
நேறியாவிஷக்கடிகள் போலேவந்து
நேர்ந்துபலவிதமான நீசந்தானே. 199

உலகதனில்செவிடூமை குருடர்தாமும்
ஊக்கமிலாச்சப்பாணி மூக்கிலாதான்
நல்குமதுவிஷக்கடிநீர் குன்மம்பாண்டு
நத்திவரும்பெருவயிறு கவுசியீளை
இலகுமதுபெரியோரைக் கற்புள்ளோரை
ஏக்கமிலாச்சிவஞானி பொருளுள்ளோரைத்
துலங்குமவர்தன்னைமிகத் தூடித்தாக்கால்
தூர்ச்சனர்க்கிந்நோயைத் தொகுத்தார்தாமே. 200

வேறு.

வன்னியேமிகுந்துதானும் வாயுவைநெருக்கும்போது
உன்னியேயுதிரம்விம்மி யுறுகுடல்வெந்துபின்னும்
பின்னுமேமயங்களுலே பெருத்துடனுதாஞ்சார்ந்து
துன்னியேவாய்வுமோதுஞ் சுரோணிதங்கெடுதியாமே. 201

கண்டத்தில்வாயுபுக்கிக் கபாலத்தைச்சூழ்ந்துகட்டித்
துண்டத்தில்மேல்ரப்பை சோரமுடல்சார்ந்துபின்னி
அண்டத்திற்கனலாய்ப்பற்றி யனலதுசிரசில்முட்டிக்
கொண்டுற்றகணித்ததின் சுரோணிதங்கெடுதியாமே. 202

நல்லதோர்நாடிதானு மிடையொடுசுழியும்பற்றிச்
சொல்லியகுதத்திலேனுஞ் சூட்சமாய்வினையிலேனும்
வல்லபஞ்சேர்ந்துவன்னி வாய்வொடுகபமுஞ்சேரில்
சொல்லியமருந்துசொன்னேனுஞ் சொக்கியதவங்கண்டோமே. 203

RangaRakes tamilnavarasam.com

மார்பினிலுதாரந்தங்கி மருண்டுதான்கபத்தைச்சார்ந்து
வார்வொடுதளர்ச்சியுந்தான் வறட்சியுமிகவேகாட்டிச்
சீரொடுநரம்பினோடு திசையொடுமெலும்புசார்ந்து
பேர்பெருவனலில்ரோகம் பெருத்துறவிதங்கடானே. 204

அக்கினியெரித்தகூடு ஆதாரமாறும்பற்றிப்
புக்கியேநரம்புதானும் பொன்மயங்கெட்டேதானி
தொக்கியேகபாலமுட்டித் துன்புறுப்பாரத்துமேவிக்
கக்குமாஞ்சோம்பல்ரோகங் கருத்துள்ளேகண்டுசொல்லே. 205

தாக்கியேமூலந்தன்னில் தருக்கியவாயுவோடே
நோக்கியேவன்னிதானும் நுவலியேயுதாஞ்சார்ந்து
தீய்க்குமாமலமுங்கட்டிச் சேரும்நீர்சுவறிவார
வாக்கியம்பேசுஞ்சொன்னோ மயக்கமாமூர்ச்சையாமே. 206

விஷக்கரப்பான் (வேறு)

சங்கையில்லாவிஷக்கரப்பன் வரலாறுதுஞ்
சகசமூறுங்கிருமியுருந் தகைமையேது
பொங்கியங்கேயூனுருவிக் கிராணியேது
பூராயமானதொரு பௌத்ரமேது
நங்கையர்கள்போகமுறு மேகமேது
நவிலவொண்ணுக்கிரந்தியது ரோகமேது
கங்குல்பகலவருங் காந்தலேது
கருத்துடனேயிருந்தவகைக் கருமங்கூறே. 207

உஷ்ணமேமிகுத்துவரும் ஸ்திரீபோகத்தால்
ஊனுருவியஸ்தியிலே வேவுகொண்டு
நட்டமாய்வந்ததொரு மச்சைதன்னில்
நாட்டமுண்டாய்க்கிருமிதென்று நணுகும்போது
மட்டுறவேகிருமியெல்லாம் பரந்தங்கேறி
வகையுடனேமாமிசத்தைத் துளைத்துமேலுந்
திட்டமுடன்வினிகரப்பன் பரந்துமேவித்
தினவுடனேபரபரத்துத் தினவுண்டாமே. 208

சுக்கிலந்தானுட்டினத்தில் வேவுகொண்டு
சூதானமலக்கட்டுக் கட்டுப்பட்டால்
அக்குலத்தின்மலமதிலே நாற்றமுண்டாம்
அழுகியங்கேவெந்துருகி வாழும்போது
சிக்கிமலந்தான்புழுத்துக் கிருமியுண்டாம்
தீபனங்கள்சென்றதனாற் கிருமியெல்லாம்
பக்கியங்கேபருந்தேறிச் சரீரமெல்லாம்
பராபரந்தூர்ந்தேறும் பகைமையாமே. 209

வயிறதனிற்பூநாகந் தன்னைச்சார்ந்து
வருந்தியதுபற்றுப்போற் பற்றிக்காணும்

RangaRakes tamilnavarasam.com

எழும்பியதுகிருமிதா னிடைந்துபுக்கில்
இயல்பெருகுங்குழல்மடவாய் சொல்லக்கேளு
கயிர்முறுக்கிவிட்டாற்போல் தேகந்தன்னில்
கறகறத்துச்சொறியாகிக் காணுஞ்சிழ்நீர்
உயர்பெருகும்பண்டிதரே கரப்பான்செய்யும்
உறுதிதனைநன்றாக வூணிப்பாரே. 210

கிருமியினால்வருந்தோஷம் பெருகவுண்டு
கேட்கிலதன்பிரிவுதன்னைக் கிரமமாகப்
பொருமிவரும்வாயுவெல்லாங் கிருமியாலே
புழுக்கடிபோல்காண்பதுவுங் கிருமியாலே
செருமிவரும்பௌத்திரங்கள் கிருமியாலே
தேகமதுசொறிகுட்டங் கிருமியாலே
துருமிவருஞ்சுரோணிதமுங் கிருமியாலே
சூட்சமுடன்கிருமியதைத் தொழில்செய்வீரே. 211

குஷ்டமதுவிஷகரப்பான் விஷநீர்க்கோவை
கொடுஞ்சூலைசுரோணிதத்தால் தாதுகெட்டு
மட்டறவேகிருமிசென்று மருவும்போது
வகைவகையாய்க்கிருமியுட விடநீர்சென்று
துட்டனந்தத்தேகமெல்லாம் பார்க்கும்போது
சுழிசுழியாய்க்கிருமிநீர் துன்னிக்கொள்ளுங்
கட்டறவேகிருமியிட நீரில்வந்த
கருங்குஷ்டம்விடகருப்பான் கருதிப்பாரே. 212

மலக்கிருமிநீர்க்கிருமி மஞ்சட்கிருமி
வாற்கிருமிகருங்கிருமி மண்டைக்கிருமி
துலக்கிருமிசூறைக்கிருமி சுரோணிதக்கிருமி
துலக்கிருமிகணைக்கிருமி தாதுக்கிருமி
சொலப்பெரியவாய்க்கிருமி பலக்கிருமியோடு
சுக்கிலத்தைசென்றறுக்குஞ் சூதக்கிருமி
புலக்கிருமிபுனக்கிருமி சூலைக்கிருமி
புகழ்வோன்பான்குணத்தைப் பிரித்துப்பாரே. 213

மலக்கிருமி குடல்தனிலே மருவிநிற்கும்
மற்றதொருநீர்க்கிருமி விடநீர்மேவுந்
துலக்கிருமிநரம்பின்மேல் துள்ளிநிற்கும்
சுக்கிலத்தின் கிருமியது தாதுகேடாம்
வலப்பெரியவாற்கிருமி யுதட்டிசேரும்
மண்டையினிற்கிருமியது சிரத்திலேறும்
நலம்பெரியவாய்க்கிருமி யுதட்டிசேரும்
நயனதுபற்றிநிற்குங் கிருமியாமே. 214

ரத்தமதுபொருந்துமந்த மஞ்சட்கிருமி
யியல்பான கருங்கிருமி யெங்குமேவும்

RangaRakes tamilnavarasam.com

மத்தசிறகதின்மேவுஞ் சூரக்கிருமி
பரிவாசமீறிவருஞ் சுக்கிலக்கிருமி
அந்தணர்தம்பதம்போற்றி யறிவுள்ளோர்கள்
ஆராய்ந்துகிருமியறிந் தவிழ்தஞ்செய்யில்
சித்தியாம்வயித்தியரே தேர்ந்துபாரும்
திகழ்கிருமியாவுமெழுந் தேகும்பாரே. 215

புலக்கிருமிமூலத்தி லறுக்குங்கண்டாய்
புணங்கிருமிபுண்ணுக்கும் புகழ்ந்துசொன்னோம்
சிலக்கிருமிராகூதர்போற் கிருமியேறுஞ்
சீரானகிருமியாவற்றுந் தேர்ந்துபார்க்கில்
நலக்குறியுங்குணங்கள்முதல் நன்றாராய்ந்து
நாதனிருதாள்போற்றி நன்மையாக
இலக்குரியபண்டிதரே கிருமிதானும்
இயல்பரிந்துபரிமாற மேற்றுவீரே. 216

கிராணி வருமாறு.

கேளுமினிகிராணிவந்த செய்கைதானும்
கிருமையுடன்மூலத்தில் வேவுகண்டு
நாளுமிதுகிருமியினாற் குடலேதின்ன
நாற்றமுண்டாஞ்சுரோணிதந்தா னலமுங்கெட்டு
மீளுவதுவாயுவங்கே விரவிநின்று
மேவிடிற்கிருமியெல்லாம் விரைவில்தானே
கோளுமதுபலவிதமாய்க் கழியுமப்பால்
குடிகெடுத்தகிருமிசெய்த கிராணிதானே. 127

கிராணியதின்வரலாறு உதரந்தன்னில்
கிரிச்சனமாய்ப்புசித்துவரும் பதார்த்தத்தாலும்
கிராணியுடகுடல்தனிலே யோடிநின்று
கிலுகிலென்றவாயுவங்கே யிரைச்சலாக்கிச்
கிராணியதுகொண்டுதான் வயிறுவூதிக்
கழியுமதுபொருமலவாய் விதம்வெவ்வேறும்
தரணியிடந்துர்ப்பலமா யலைச்சல்பட்டுச்
சலமலமும்பலவிதமாய்ச் சாயுந்தானே. 218

வேறு.

சொல்லுடன்சூட்சநாடி சுடரொளிபோற்காணி
வெல்லுவேன்புவியுள்ளோரை விதமுறு நூலினாலே
மல்லுவேன்சாஸ்திரத்தை வகைவகையாகப்பாடிக்
கல்லதைக்கரைத்தாற்போல நூல்களைக்கருதிப்பாரே. 219

அகாரமுதலைம்பத்தோ ரெழுத்துந்தானும்
ஐந்தெழுத்துமெட்டெழுத்து மதுவேயாகும்
விகாரமுடநின்னவிலொளி லதுவேயாகும்
விகாரமுடனுதார மாறேழாகும்

RangaRakes tamilnavarasam.com

உகாரமுடன் தத்துவங்கள் தொண்ணூற்றாறும்
உற்றுநிற்குங்குருநாடி யென்றுபோலச்
சிகாரமெனுஞ்சடாக்ஷரத்தை மூலநாடி
சிவசிவாவென்றநிலை தெளிந்துபாரே. 220

ஒன்றுக்குமெட்டாத நாடிநேர்மை
ஊடுருவித்தாண்டிநிற்கு முண்மைகேளு
வண்டுகருநேர்மைபோல் வருகும்பித்தம்
மருவியசிலேற்பனத்தில் மதுவுண்டார்போல்
என்றைக்கும்வாதபித்தம் நடுவேநிற்கும்
ஏறுவதுங்குறைவதுவு மில்லைசொன்னோம்
கன்றுக்குப்பாலிறங்கும் நேர்மைபோலக்
காத்திருக்குங்குருநாடிக் காலைப்பாரே. 221

வேறு.

உற்றதோர்வாதந்தன்னி லுறுதியாய்க்கீழுமேலும்
பற்றியேமூன்றும்பின்னும் பதினைந்துதாங்பயணஞ்சார்ந்து
சுற்றியேவிசையினூடே சுழிமுனைதன்னைநோக்கும்
குற்றியேதம்பூருவினை குறியெனக்கொள்கைபாறே. 222

நாடிடுந்தம்பூருதன்னில் நரம்பிசைகாணுந்தந்தி
கூடிடுந்தந்திதன்னைக் குறியெனத்தெறிக்குமாபோல்
ஓடிடுமசையில்நாடி யுன்னியேபதியவொன்று
சாடிடுநாடிதானுந் தான்குருநாடியாமே. 223

தந்திக்குத்தந்திவெவ்வேறு நாதமும்பலதரம்போலக்
குந்திக்குவாதபித்த மையமுங்கொள்கைபோல
வந்திக்கும்விதங்களெல்லாம் வகையெழுதம்புருவினை
விந்தைக்கும்விங்கணாடி விவரந்தானறிந்துபாரே. 224

மந்தமுஞ்சுருக்குஞ்சாந்தம் மதிதருங்கோபமேகம்
இந்துவைநாதம்போல விசைக்குமந்நாடிகண்டாய்
உந்தியவாதநாடி முழுதுமேசாந்தமாகும்
மந்தமாய்சேத்மநாடி மகிழ்சுரைப்பித்தமாகும். 225

மந்தமூஞ்சுக்கிலந்தான் வகையுடன்வாதபித்தம்
மூந்தவேசாந்தமேகம் முற்றிடில்வாதஞ்சிலேற்பம்
அந்தமாஞ்சாந்தசிதம் அப்படியதியஞ்சிலேற்பம்
விந்தமாங்கோதுகோசம் விளங்கிடிற்பித்தஞ்சிலேற்பம். 226

நளினமாஞ்சாந்தங்கோபம் நாட்டியசிலேத்மம்வாதம்
விளினமாஞ்சிறந்தசாந்தம் மேவிடிற்பித்தம்வாதம்
குளினமேகூறுமேவுங் குணந்தனைப்பிரித்துப்பார்க்கில்
தெளினமாம்நரம்பினோசை சென்னியில்கூர்ந்துபாரே. 227

RangaRakes tamilnavarasam.com

இப்படிபொன் றமைந்த விதனுடனே ழுமாகிச்
செப்பினோர்திசையில்நாடிச் செயம்பெறுங்குணங்களெல்லாம்
ஒப்புடனுரைகள்செய்தே னுலகினிலறியவேண்டி
வைப்புறுபொதிகைவாழு மருள்முனிபுரைசெய்திரே. 228

குருநாடியென் றுதானே குறிப்புடன்பதிதானுக்
திருநாடிசொல்லக்கேளீர் சிவனயன்மாகுமாகும்
வருமோடிபஞ்சநாடி வகையுடனெழுத்தஞ்சாகுக்
தெருமோடிசந்தாநாடி சனத்தொளிர்சதமெலும்பே. 229

சொல்லியநாப்புதானும் தோற்றுபின் கலையினோடு
வல்லிசிங்குவைகாந்தாரி வகுப்புடன்புருடன்தானும்
வெல்லியபிரமதேவன் விளங்கிடுமத்தியோடு
புல்லியசிதாங்கனோடு போற்றுநாடியாமே. 231

அடைபொருநாடிதானு மிசைந்திடும்வலதுகாலில்
அடைவுடன்சுற்றிபேறி யமர்ந்திடும்வினைத்தண்டில்
மடமயில்மானேயின்னு மிடதுகண் தன்னைநோக்கி
உடலெனவோடிநிற்கு முண்மையையறிந்துகொள்ளே. 231

பின்கலையானநாடி யிடதுகால்தன்னைப்பற்றி
முந்தவேசுற்றிபேறி வலதுகண் தன்னைமுட்டும்
பின்கலைசுழினைநாடி மூலத்தைப்பற்றிநின்று
அன்பெனச்சுழுமுனையி லபர்த்துதானஞ்சண்டாமே. 232

அத்தியாம்நாடிதானு மமர்ந்திடுமெலும்பைப்பற்றி
சித்தியாஞ்சிங்குவைநாடி சேர்ந்திடுநாவைப்பற்றி
முத்திரைகாந்தாரிதானும் மூக்கினைப்பற்றிநிற்கும்
கத்தியேயலம்புரிக ளுற்சதுரத்தில்நிற்கும். 233

பூமகள்புருடன்றானும் புரையறவுந்திலாறும்
நாமகன்பிரமன்றானும் நாடியபாம்புசேரும்
கோமகள்சிதாதேவி கொடுமுடிமேவிநிற்கும்
வாமகனிவைகட்கெல்லாம் பொருந்துருவகையைப்பாரே. 234

சொன்னார்நாடியிருநூறு தோற்றமுப்பத்தைந்தினிலே
அன்னேதனக்குஅரனொரு மன்பாலெடுத்துத்தானுரைத்தார்
முன்னோராயுள்வேதமிது முழுதும்நாடிதானுரைத்தார்
பன்னோமாந்தர்க்குறுதியுடன் பகர்ந்தார்முனிவர்முற்றுமே. 235

அகஸ்தியர் அருளிச்செய்த

குருநாடிசாஸ்திரம்

முற்றிற்று.

RangaRakes tamilnavarasam.com